4192.

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

அழகியமணவாள தாசனென்கிற

திவ்வியகவிப்பிள்ளைப்பெருமாள்

ஐயங்கார் அருளிச்செய்த

திருவரங்கத்தந்தாதிமூலமும்,

திரிசிரபுரம்

மஹாவித்வஜ்ஜன சேகரராகிய

வி. கோவிந்தபிள்ளையவர்கள்

முன்னிலையில்

ம-ா-ா-ஸ்ரீ, ரிஜிஸ்டர்,

கிருஷ்ணசாமிமுதலியாரவர்கள்

குமாரர்:

நம்மாழ்வார்தாசரவர்களால்,

செய்தபிரதிபதமும்

முன்பதிப்பித்த பிரதிக்கிணங்கப்

பரிசோதித்து,

இஃது.

திரிசிரபுரம்,

புத்தகஷாப்பு

இ. சபாபதிபிள்ளை

அவர்களது

ஸ்ரீமட்டுவார்குழலம்பாள் அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது,

1888

விளம்பரம்.

இதனால் யாவருக்கும் தெரிவிப்பதுயாதெனில் ☞ தக்ஷிணகயிலாயம் திரிசிராமலை, திருச்சிரபுரம், திருச்சிறாப்பள்ளிஎன்னும் பலநாமங்களுடைய ☞ திரிசிராமலை புராணம் என்னும் செவ்வந்திபுராணம் வெகுகாலமாய் அச்சிடாமலும் நூல்கிடைக்காமல் மறைவுபட்டிருந்ததினால் அதைஇப்போது ஷை யூர் மாத்ருபூதேஸ்வரா இடப்பாகம்பெற்ற சுகந்தகுந்தளநாயகி யம்மனென்றும் ஸ்ரீமட்டுவார் குழலம்பாளம்மனென்றும் இத்திருநாமம்பெற்ற ஷை அம்மனுடைய அனுக்கிரகத்தால்சென்னை சிந்தாதிரிப்பேட்டை சாமிநாய்க்கர்வீதி (௯௩) வது நெம்பர்வீட்டில் ஷை ஸ்ரீ மட்டுவார் குழலம்பாளம்மன்பேரால் அச்சுக்கூடம் வைத்து விருத்தியுண்டாகி வருகிற இவ்வச்சுக்கூடத்தலைவராயும், ஷை. யூரிலும் தஞ்சாவூர் கருவூரிலும் புதுக்கோட்டையிலும் புஸ்தகக்கடை வைத்திருக்கும் தி. சபாபதிபிள்ளையவர்களால் வித்துவாம்சர்களைக்கொண்டு பிழைகளைத் திருத்தி நல்லகாகிதமெழுத்துக்களுடன் ஷை செவ்வந்திபுராணமும் சைவாகமமிருபத்தெட்டினுள் - உ௪ - வது சந்தான சர்வோத்தமத்தின் உபதேசம் பதினென்றினுள் - அ - வது சிவதருமோத்திரமும் திருமூலர் திருமந்திர மூவாயிரமும் அச்சிட்டிருப்பதால் அதுவும் ம-ா-ா-ஸ்ரீ, ஆறுமுகநாவலரவர்களாலும் ம-ா-ா-ஸ்ரீ, புஷ்பரத செட்டியாரவர்களாலும் அச்சிட்டபுஸ்தகங்களும் மற்றபலவிததமிழ் தெலுங்குகிரந்தம் பாடசாலைக்குபயோகமுள்ள புஸ்தகங்களும் ஷை யூர்களில் ஷை யார் கடைகளில்விலைசகாயமாய் வாங்கிக்கொள்ளலாம்.

இப்படிக்கு,

தி. சபாபதிபிள்ளை - தம்பி,

☞ வெங்கிடாசலம்பிள்ளை,

மருமகன் ☞ சுப்பராயப்பிள்ளை.

சர்வஜித்து-ஹூ
மாசி-மீ உ௰௨

முகவுரை

4192.

நிலமண்டிலவாசிரியப்பா

திருமலருந்தித் திசைமுகனளிப்ப
வருமலர்தலைய வையகத்துற்ற
கடியார்துளவக் கவின்றோளரங்கன்
அடியார்க்கடியார்க் கடியார்க்கடியேன்
வந்தனந்தந்துரை வாய்மையைப்புலவீர்
உந்தநற்செவியுற வுவப்புடன்கேண்மின்
அந்தமினுண்மறை யாழ்வார்பதின்மர்
செந்தமிழாகச் செய்யவுமருது
நாலாயிரமா னனியோர்சிறிய
நூலாயிருப்ப நுவன்றிடப்புக்கு
துக்கமின்மார்க்குத் துணிவியவொட்டே
தக்கநற்குணங்க டந்தொகையெட்டே
அருமங்கயர்முத லரம்போகமெட்டே
திருமந்திரத்துட் டிகழெழுந்தெட்டே
ஆயிருப்பதலா லவன்றனையற்கும்
மேயிருங்கண்களு மெட்டாயிருத்தலின்
எட்டுக்குறியவ னெம்பிரானென்றே
கட்டுறுதந்துற் கணக்குமருதாகெனத்
திருவாய்மலர்ந்து தேயாவிசையுறு
மருவாய்மலர்ந்தார் மாமணவாளா
தாசருகந்தரு டன்மையுற்றியார்க்கும்
பேசருமட்டப்-பிரபந்தத்துள்
நந்தாதியங்கு நற்றிருவரங்கத்
தந்தாதியதற் கழகார்பிரதிபகம்
பொன்னசலந்தனைப் புரட்டுவல்யானெனத்
துன்னசவலினே நோமுடையேனும்
வளாவாணிசைந்து வளம்பெறுபதங்கட்
குளாவானிலக்கியத் தற்றுணர்ந்தனவும்

முகவுரை.

தண்டமிழ்வேதந் தன்னிலுய்ந்த
வண்டமிழ்நூலினு மற்றவையேழினும்
நிகழும்பதங்களைநேர்படத்தொடுத்துத்
திகழுமியற்சொல் செப்பும்பொருள்கள்
புலன்படநிற்றலிற் புகலாதொழித்துப்
பலன்றருபண்புறு பாக்களுட்பட்ட
தெரிவரியனவை தெளிவுறக்கேட்டு
வரிவரிதோறும் வண்டளைபிரித்துப்
போதவர்திரிசிர புரந்தனிவிழைத்த
மாதவத்தாங்கு வந்தவதரித்தோன்
பொற்பாகவரி புணையடியேத்தும்
நற்பாகவத னுவலர்தலைவன்
இங்கைந்திலக்கண மிலக்கியந்தன்னுளுஞ்
சங்கைகடீர்ந்தோன் சதுரகோவிந்தன்
என்னும்பெயரினு னிடங்கொண்டிதனுள்
துன்னுங்குறைகளைத் துடைத்திடச்செய்தே
பதித்தனனடியேன் பாழ்மனக்கவலையின்
கதித்தனவைகளுங் கல்லாக்குறைகளும்
அச்சாசிரிய ராற்றுமநந்த
நச்சாசிரிக்க நற்றிறமின்மையும்
அக்கரஞ்சொற்பொருளார்புணைகளைந்து
சிக்கறச்செய்யிலாத்தீமையுமற்றும்
எல்லாங்கமித்தடியேற்கருள்புரிந்தென்
பொல்லாங்கறுத்துப் புணரியங்கணத்தின்
இழிசீர்தனையு மேற்குங்கட்டமையின்
கழிசீரோனுங் கற்றிலேனுணையும்
வணைமினென்பதுவே வணையென்விண்ணப்பம்
ருணைகடல்சூழ்தருங் குவலையந்தனிலே

முகவுரை-முற்றிற்று,

இங்ஙனம்
நம்மாழ்வார்தாசன்

ஸ்ரீ

ஸ்ரீபராங்குசதிவாகராயநம:

திருவரங்கத்தந்தாதிப் பிரதிபதம்.

தனியன்.

மணவா ளரவிந்தை மார்நோக்க விம்மை மறுமையின்மா
மணவாளர் தம்பதம் வாய்த்திடுங் கோயிலில் வந்தவந்த
மணவாளர் பொற்றிருப் பாதாம் புயங்கட்கு மாலையென
மணவாளர் சூடும் யமகவந்தாதியை வாசிமினே.

(இதனது பதப்பொருள்.)

இம்மை-இக்காலத்தில், மணம்-வாசனைபொருந்திய, வாள்-தேஜஸுடைய, அரவிந்தைமார்-தாமரைமலரில் வாசஞ்செய்யும் அஷ்டலட்சுமிகளும், நோக்க கடாட்சஞ்செய்ய, மறுமையில்-இனிவருங்காலத்தில், மாமணவாளர்தம்-ஸ்ரீயப்பதியுடைய, பதம்-திருவடிகள், வாய்த்திடும்-சித்திக்கும், கோயிலில்-திருவரங்கம் பெரியகோயிலில், வந்த-எழுந்தருளிய, அந்தமணவாளர்-அழகியமணவாளருடைய, பொன்-பொலிவுற்ற, திருப்பாதாம்புயங்கட்கு-திருவடித்தாமரைகளுக்கு, மாலையென-மாலையென்று, மணவாளர்-அழகியமணவாளதாசரென்கிற திவ்வியகவிபிள்ளைப்பெருமாளையங்கார், சூடும்-சாத்தும், யமகஅந்தாதியை—, வாசிமின்—பயிலுங்கள் (என்றவாறு)

காப்புகள்.

ஓராழி வெய்யவன் சூழுல கேழுவந் தேத்தரங்கர்
காராழி வண்ணப் பெருமாளந் தாதிக்குக் காப்புரைக்கிற்
சீராழி யங்கையிற் பொற்பிரம் பேந்திய சேனையர்கோன்
கூராழி சங்கந் திருக்கதை நாந்தகங் கோதண்டமே

(இ-ள்) ஓர் ஆழி-ஒற்றைச்சக்கரத்தைப்பூண்ட தேரினையுடைய வெய்யவன்-ஆதவன், சூழ்-சூழ்ந்துவரும், உலகுஏழ்-சப்தலோகங்களும், உவந்து-ஆனந்தமெய்தி, ஏத்து-பரவும், அரங்கர்—, கார்-கரிய * மேகம்போலவும் * ஆழி-கடல்போலவும், வண்ணம் - திருமேனியையுடைய, பெருமாள்-பெருமாளாகிய அரங்கர், அந்தாதிக்கு-அந்தாதியென்னும் பிரபந்தத்துக்கு, காப்பு-காப்பாக, உரைக்கில்-சொல்லுங்கால், சீர்-சிறப்புற்ற, ஆழி-மோதிரமணிந்த, அம்-அழகான கையில்-கரத்தில், பொன்-சொன்னமயமான, பிரம்பு-பிரம்பினை, கோலினை * ஏந்திய-பிடித்த, சேனையர்கோன்-சேனைமுதலியார், கூர்-கூரிய, ஆழி-சக்கரத்தாழ்வான், சங்கம்-பாஞ்சசன்னியம், திருக்கதை-தண்டாயுதம், நாந்தகம் கட்கம், கோதண்டம்-சார்ங்கம் (ஆகிய இவைகளேகாப்பாகும்—எ-று. (க)

வையம் புகழ்பொய்கை பேய்பூ தன்மாறன் மதுரகவி
யையன் மழிசைமன் கோழியர் கோனருட் பாண்பெருமான்
மெய்யன்பர் காற்பொடி விண்டுசித் தன்வியன் கோதைவெற்றி
செய்யங்கை வேற்கலி யன்றமிழ் வேத நிலைநிற்கவே

(இ-ள்) வையம்புகழ்-உலகோர்பரவும், பொய்கை-பொய்கையாழ்வார், பேய்-பேயாழ்வார், பூதன-பூதத்தாழ்வார், மாறன்-நம்மாழ்வார், மதுரகவியையன்-மதுரகவியாழ்வார், மழிசைமன்-திருமழிசையாழ்வார், கோழியர்கோன்-குலசேகராழ்வார், அருள்பாண்பெருமான்-திருப்பாணாழ்வார், மெய்-உண்மைவிளங்கிய, அன்பர்காற்பொடி-தொண்டரடிப்பொடியாழ்வார், விண்டுசித்தன்-பெரியாழ்வார், வியன்-பெருமையுற்ற, கோதை-சூடிக்கொடுத்த நாச்சியார், அங்கை-அழகியகரத்திலே, வெற்றி-ஜெயம்பொருந்திய, செய் - (சத்துருக்களது) நிணமுடைய, வேல்-வேலாயுதத்தையேந்திய, கலியன்-திருமங்கையாழ்வார், தமிழ்வேதம் - (இந்தப்பன்னிருவரால் நியமிக்கப்பட்ட) திராவிடவேதமாகிய திவ்வியபிரபந்தம், நிலைநிற்க-நீடூழிகாலமும் வாழியவே—எ-று. (உ)

சீதரன் பூமகள் சேனையர் கோன்றென் குருகைப்பிரா
னாதமுனியுய்யக் கொண்டா ரிராமர்நல் லாளவந்தா
ரேதமில் வண்மைப் பராங்குச தாச ரெதித்தலைவா
பாத மடைந்துய்ய வாழ்வா னெம்பார்பட்டர் பற்றெமக்கே

(இ-ள்.) சீதரன்-திருமால், பூமகள்-ஸ்ரீமகாலட்சுமி, சேனையர்கோன்-சேனைமுதலியார், தென்-அழகிய, குருகைப்பிரான்குருகூரிலுள்ளவர்க்கு உபகாரகரானசடகோபர், நாதமுனி-உய்யக்கொண்டார், இராமர்-மணக்கால்நம்பி, நல்-நலமுடைய, ஆளவந்தார்-ஸ்ரீ ஆளவந்தார், ஏதம்இல்-அகளங்கராகிய, வண்மை-வளந்திகழும், பராங்குசதாசர்-பெரியநம்பி, எதித்தலைவர்-எதிராஜர், பாதம்-(இவருடைய) திருவடிகளில், அடைந்து-சேர்ந்து உய்ந்த-உஜ்ஜீவித்த, ஆழ்வான்-கூரத்தாழ்வான், எம்பார்-பட்டர், பற்று(இப்பதின்மூவரது திருவடி)சம்பந்தம், எமக்கு உண்டாகக்கடவது)—எ-று.

திருமாலையாண்டா றிருக்கோட்டிநம்பி திருவரங்கப்
பெருமாளரையர் திருமலைநம்பி பெரியநம்பி
யருமால்கழல்சே ரெதிராஜர்தாளிற்சிங்காதனராய்
வருமாரியர்க ளெழுபத்துநால்வரென் வான்றுணையே

(இ-ள்.) திருமாலையாண்டான்-(உடையவர்க்கு) திருவாய்மொழிஉபதேசித்தவரும், திருக்கோட்டிநம்பி-சரமசுலோகமுபதேசித்தவரும், திருவரங்கப்பெருமாளரையர்-த்வயோபதேசஞ்செய்தவரும், திருமலைநம்பி-ஸ்ரீராமாயணஞ்சொன்னவரும், பெரியநம்பி-திருமந்த்ரோபதேசஞ்செய்தவரும், அரும்-அருமையான, மால்-திருமால், கழல்-பாதங்கள், சேர்-அடைந்த எதிராஜர்-பாஷ்யகாரர், தாளில்-திருவடிகளில், சிங்காதனராய்-சிம்மாசனாதிபதிகளாய், வரும்-வரப்பட்ட, ஆரியர்கள்-ஆசாரியர்கள், எழுபத்துநால்வர்-எழுபத்துநான்குபேரும், என்வான் துணை-எனக்குப்பெருமைபொருந்திய-துணையாகக்கடவார்கள்—எ-று. (௪)

மாறன் பராங்கதி தந்தடியேனை மருட்பிறவி
மாறன் பரான குழாத்துள்வைப்பான் றெல்லை வல்வினைக்கோர்
மாறன் பராமுகஞ் செய்யாமலென்கண் மலர்க்கண்வைத்த
மாறன் பராங்குசன் வாழ்கவென்னெஞ்சினும் வாக்கினுமே.

(இ-ள்.) மால்தன்-திருமாலுடைய, பராங்கதி-பரமபதத்தைத்தந்து-அளித்து, அடியேனை-தொண்டனான என்னை-மருள்-மயக்கமுள்ள

பிறவி - ஜென்மம், மாறு - நீங்கின, அன்பரான - தாசர்களாகிய, குழாத்துள் - கூட்டத்துள், வைப்பான் - இருத்துபவன், வல் - பலமுள்ள, தொல்லைவினைக்கு - பூர்வகன்மத்துக்கு, ஓர் - ஒப்பற்ற - மாறன் - விரோதியானவன் பராமுகஞ்செய்யாமல் - அசட்டை செய்யாது, என்கண் - என்மேல், மலர்க்கண் - கடாக்ஷவீக்ஷண்ணியம், வைக்க - இருத்திய, மாறன்பராங்குசன் - காரிமாறனாகியபராங்குசன், வாழ்க - உறையக்கடவன், என் - அடியேனது, நெஞ்சினும் மனதிலும், வாக்கினும் - மொழியிலும் — என்று. (ச)

நூல்.

திருவரங் காவுறை மார்பா திசைமுகன் சேவிப்பசந்
திருவரங் காதரித் தின்னிசைபாடத் திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடியேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக்கேதொண்டு செய்வதற்கே.

(இ-ள்.) திரு - பெரியபிராட்டியார், அரங்கு ஆ - (உறையும்) இடம் ஆக, உறைமார்பா - வசிக்கும்மார்பையுடையவனே, திசைமுகன் - சதுர்முகன், சேவிப்ப - வணங்கவும், சந்திருவர் - யாழ்வல்லோர், அங்கு - அக்கோயிலில், ஆதரித்து - காதலித்து இன் - இனிய, இசைபாட - இராகத்தைப்பாடுதல்செய்யவும், திருக்கண்வளர் - அழகியதாய்க்கண்படுக்கும், திருவரங்கா - திருவரங்கனே, உன் - உனது, பழஅடியேற்கு - தொன்றுதொட்டுவரும் தாசபூதனாகிய எனக்கு அருள்செய்ய - கிருபைபண்ண, எழுந்திரு, உனக்கே - நின்றனக்கே, உன் ஒருவனுக்கே, தொண்டுசெய்வதற்கு - அடிமை புரிவதற்கு, வரம், — காதலித்தேன் - ஆசைப்பட்டேன் — என்று. (ரு)

செய்ய வளைக்குரு வின்னருளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங்கேசன்சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங்காந்தசெவ் வாய்முகுந்தன
செய்ய வளைக்குஞ் சிலம்பணிபாதங்கள்சேர்ந்தனமே.

(இ-ள்.) செய்யவளை - பூமகளை, குரு - ஆசாரியரது, இன் - இனிய, அருளால் - கடாக்ஷத்தினால், திருத்தாள்வணங்கி - திருவடியைப்பணிந்து, செய்ய - வயல்களை இடமாகவுடைய - வளைக்குலம் - சங்கினங்கள், சூழ் அரங்கேசன் - சூழ்ந்த அரங்கத்துக்கீசன், சிறிது அமுதுசெய்ய, கிஞ்சித்து அருந்த, அளைக்கும்புவிக்கும் - தயிர்க்கும்உலகுக்கும், அங்காந்த - அண்ணாந்த, திறந்த, செவ்வாய் - சிவந்தவாயினையுடைய முகுந்தன் - முகுந்தனென்னும் நாமத்தையுடைய, — (அவனது) செய்ய - செவ்விதாக, வளைக்கும் - வளைக்கப்

பட்ட, சிலம்பு-நூபுரம், பரிபுரம்-பாதச்சிலம்பும் அணி-தரிக்கப்பட்ட, பாதங்கள்-திருவடிகளில், சேர்ந்தனம், அடைந்தோம்.

தனமா தரஞ்சொற் குதலைப் புதல்வர் தரணியில்லந்
தனமா தரஞ்செயும் வாழ்வஞ்சி யேதஞ்ச நீயெனப்போந்
தனமா தரங்கிக்க வெற்பெடுத் தாய்தண் ணனந்தசிங்கா
தனமா தரங்கமுள் ளாயரங் காமுத்தி தந்தருளே

(இ-ள்) தனம்-(ஆடவரதுமதியை மருட்டுநீர்மையுள்ள) கொங்கைகளையுடைய—மாதர்-பெண்கள்—அம்-எழில்பொருந்திய—குதலைச்சொல்-மழலைமொழிகளையுடைய— புதல்வர்-பிள்ளைகள்—தரணி - பூமி-இல்லம் மனை—தனம்- பொன்—(இவைமுதலியவற்றில்) ஆதரஞ்செய்யும்- காதல் கொள்ளும்-வாழ்வு(நிலையற்ற அற்ப)வாழ்வுக்கு—அஞ்சி-பயந்துப்—தஞ்சம்நீயென-நீயேபற்றுக்கோடென—போந்தனம்- அடைந்தோம்— ஆ-பசுக்கள், தரங்கிக்க இந்திரனனுப்பியமழையினல்)வருத்தமுற—வெற்பு (கோவர்த்தன) கிரியை—எடுத்தாய்-(குடையாகப்) பிடித்தவனே—தண்-சீதளமுள்ள—அந்தசிங்காதன- ஆதிசேடனைச் சிம்மாதனமாகவுடையவனே—மாமகத்தாகிய ௦ நாச்சியார் அவதரித்த ௦ தரங்கமுள்ளாய்-திருப்பாற்கடலுள்ளவனே—அரங்கா—முத்திதந்து-அருள்-வைகுந்தங்கொடுத்து அருள்—எ-று. (௯)

தந்த மலைக்குமுன் னின்ற பிரானெதிர் தாக்கிவெம்போர்
தந்த மலைக்குமைத் தானரங் கேசன் றண்பூவினிடைத்
தந்த மலைக்குத் தலைவன்பொற் பாதஞ் சரணென்றுய்யார்
தந்தமலைக்கும் வினையா லைவார்பலர் தாரணிக்கே,

(இ-ள்,) பலர்-அநேகர்—தாரணிக்கே-பூமியிலே—தந்தமலைக்கு(தந்தங்களையுடையமலைபோன்ற) யானைக்கு—முன்னின்றபிரான் எதிரில்எழுந்தருளிச் சேவைசாதித்த ஸ்வாமி—எதிர்தாக்கி எதிர்த்துத்தாக்கி—முன்னேமோதி ௦ வெம்- உக்கிரமான—போர்தந்த-யுத்தம்புரிந்த—மல்லை-மல்லர்களை—குமைத்தான்—(தவிடுபொடியென, நெருக்கினவன்—அரங்கேசன்- அரங்கத்துக்குஈசன்—தண்-தண்மைபொருந்திய—பூவின்-தாமரையில்(உள்ள)—இடை- மருங்குலாகிய—தந்து-இழையினையுடைய—அமலைக்கு-பரிசுத்தாகாரமுள்ளஸ்ரீமகாலட்சுமிக்கு—தலைவன்- நாயகன், (அவனது)பொன்-பொன்போன்ற ௦ பொற்புள்ள ௦ பாதம்- திருவடிகளை,

சரணென்று-தஞ்சமென—உய்யார்-பிழையார்கள்—(ஆனல்) தம்தம் அவி க்கும்- தங்கள்தங்களை வருத்தப்படுத்தும்—வினையால் பூர்வகன்மத்தால்) வைவார்-மெலிவார்கள் (இதுஎன்னுடைத்தனமோ)

தாரணி தானவன் பாலிரந் தான்சங்கம் வாய்வைத்தொன்றார்
தாரணி தானவரு செய்தானரங்கன் தமர்கள்பொருந்
தாரணி தான வமரா வதியுந் தருநிழலுந்
தாரணி தான வயிரா வதமுந் தருகினுமே.

(இ-ள்), தாரணி மூன்றடி) நிலத்தை—தானவன்பால்-(மாவலிச்சக்கிரவர்த்தியென்னும்) அசுரனிடத்து—இரந்தான்-ஏற்றவன்—சங்கு-பாஞ்சசன்னியத்தை—வாய்—அழகிய—வாயவைத்து-வாயினிடத்திருத்தி—ஒன்றார்-சத்துருக்களது—தார்-அணி-படைவகுப்பினது ஒழுங்கினை—தான்-தானொருவனே—அவம்செய்தான்-வியர்த்தமாகப்பண்ணினவன்—அரங்கன், (அவனது) தமர்கள்-தாசர்கள்—பொருந்தார்-சம்மதியார்கள்—அணி அது ஆன-அழகியது ஆகிய—(அன்றிக்கே அண்ணியது ஆன-சமீபத்துள்ளது ஆகிய—அடுத்த) அமராவதியும்-சுவர்க்கலோகமும்,தருநிழலும்-கற்பகநிழலும்தார் அணி-கிண்கிணிமாலையைப்புனைந்திருக்கும்,தானம்-மும்மதங்களையுடைய, அயிராவதமும்-வெள்ளையானையையும், தருகினும்-கொடுத்தாலும்—(தேவேந்திரப்பட்டமேகிடைப்பதாயினும்பூலோகவைகுந்தமென்னும் திருவரங்கமாநகரைவிட்டுப்பிரியச் சம்மதியார்கள்—எ-று. (௫)

தருக்கா வலாவென்று புல்லனைப் பாடித்தன விலைமா
தருக்கா வலாய்மயிலேகுயி லேயென்று தாமதராய்த்
தருக்கா வலாநெறிக் கேதிரி வீர்கவி சாற்றுமின்பத்
தருக்கா வலாயுதன் பின்றோன் றரங்கர்பொற் றாளிணைக்கே.

(இ-ள்,)தரு-கற்பகவிருட்சத்துக்கு—காவலா-இறையாகிய-இந்திரனே—என்று- எனப்புகழ்ந்து—புல்லனைப்பாடி- அற்பனைப்பாடி—தனம்-கொங்கைகளையுடைய —விலைமாதருக்கு-பொருட் பெண்டிர்க்கு—ஆவலாய்-ஆசையாய்—மயிலே(நடனம்புரிவதில்) தோகையன்னவளே—குயிலே-(இன்னிசைபாட) கோகிலமன்னகுரல்படைத்தவளே—என்று- (சண்மோகவாஞ்சையினால் இன்ன) கூறி—தாமதராய்-தாமசகுணத்தவராய்—தருக்கா-தருக்கி—செருக்கடைந்து* அலாநெறிக்கே-(நன்மை) அல்லாத மார்க்கத்திலே—திரிவீர் - உழலும்புலவீர்—பத்தருக்கு ஆ-பக்தருக்கு ஆக—அலம்-கலப்பையை—ஆயுதன்—ஆயுதமாகஉடையபலபத்திரனுக்கு—பின்தோன்று-பின்வந்து அவதரித்த—அரங்கர்- அரங்கரது,பொன்-அ

ழகுள்ள, தாளிணைக்கே உபயதிருவடிக்கே. கவிசாற்றுமின்-நும்கவித்துவங்களைச்சொல்லுங்கள்—எ-று. (௬)

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பகிற் பீர்புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தா னரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதந் தலைக்கொண்மினே.

(இ-ள்.) தாளத்தனம்-தாளம்போன்ற குயங்களையும், தத்தைச்சொல்லியரால்-கிளிமொழியன்ன வசனங்களையும் உடைய (அன்னிய) மாதரால், வரும்-வராநின்ற, தாழ்-ஆழ்ந்த-மலம்-அசுத்தமாகிய, பாதாளத்து-நரகத்தின், அனத்தத்தை-சேட்டை.தப்பகிற்பீர்-தப்பிக்கரையேறுவீர்கள்.தப்பித்துக்கொள்ள இருப்பீர்கள்.புடைதங்கிய-பாகந்தேவாரநின்ற, வேதாளத்தன் வேதாள கணங்களையுடையசிவனது, அத்தத்தை-(பிச்சையெடுத்தலாகிய) அந்தவிபத்தை, தீர்த்தான்-ஒழித்தவன், அரங்கன்-சகடுஉதைத்த-சகடாசுரனைச்சாடிய, தாள் பாதங்களையுடைய, அத்தன்-அப்பன் அத்தத்து-கரத்திலே-ஐஆயுதன்-பஞ்சாயுதங்களை யேந்தியவன், (அவனது)பாதம்-திருவடிகளை, தலைக்கொள்மின்-சிரசில், அணியுங்கள்—எ-று. (௭)

தலையிலங் காபுரஞ் செற்றா னரங்கனென் றாழ்சொற்புன்கு
தலையிலங் காதரஞ் செய்த பிரான்சர ணன்றிமற்றோர்
தலையிலங் காநின்ற கண்ணிலங் காண்கைக்குத் தாழுகைக்குத்
தலையிலங் காதிலங் கேட்கைக்கு வாயிலஞ் சாற்றுகைக்கே.

(இ-ள்.)தலைமுதன்மைபெற்ற, இலங்காபுரம்-இலங்கைவாழ்அரக்கரை செற்றான்-சங்கரித்தவன், அரங்கன், என-தாசனாகிய எனது, தாழ்-இழிவுடைய, சொல்-மொழிகளாலாய கவித்துவங்களை, புன்குதலையில்-மழலைச்சொற்கள்போல, அங்கு-யான் பாடுகிற அவ்வவ்விடங்களில், ஆதரஞ்செய்தபிரான்-ஆசைப்பட்ட உபகாரகன் (அவனது)சரண்அன்றி-திருவடிகள் அல்லாது, மற்றோர் தலை-வேறோர் தெய்வத்தின்இடத்தில், காண்கைக்கு-நோக்குதற்கு, இலங்காநின்ற-ஜொலிக்கும், கண் இலம்-நேத்திரங்கள் உடையோம்-அல்லேம், தாழுகைக்கு-வணங்குதற்கு, தலைஇலம்-சிரசுடையோம்-அல்லேம், கேட்கைக்குக்காது இலம் (அந்தத்தெய்வத்தின் புன்சரிதை)கேட்கிறதற்குச் செவியுடையோம் அல்லேம், சாற்றுகைக்கு-துதிசொல்ல, வாய்இலம்-வாயுடையோம் அல்லேம், இவ்வவயவங்களெல்லாம் அரங்கனுக்கேதொண்டுபட்டிருக்கின்றன—எ-று. (௮)

கைக்குஞ் சரமன் றளித்தா யரங்கமண் காக்கைக்குமாய்க்
கைக்குஞ் சராசர மும்படைத் தாய்கட னீறெழுந்து
கைக்குஞ் சரமக ரக்குழை யானெனைக் கைக்கொளுடல்
கைக்குஞ் சரம தசையிலஞ் சேலென்றென் கண்முன்வந்தே.

(இ-ள்) கை-துதிக்கையையுடைய, குஞ்சரம்-(கஜேந்திரனென்னும்)யானையை, அன்று (ஆதிமூலமே எனவிளித்த) அக்காலத்தில், அளித்தாய-இரட்சித்தவனே, அரங்க, மண், உலகினை, காக்கைக்கும்-அளிப்பதற்கும், மாய்க்கைக்கும்-அழிப்பதற்கும், சரம் அசரம்-ஸ்தாவரசங்கமங்களை சராசரங்களை * படைத்தாய்-சிருஷ்டித்தவனே' கடல்-சமுத்திரமானது, நீறு-சாம்பலாய், எழ-எழும்ப, துகைக்கும்-கலக்கும, சர-அஸ்திர முடையாய், மகரக்குழையாய்-மகரகுண்டலத்தைத் திருச்செவியில்) அணிந்தவனே-உடல்-(எனது ஆவி) யாக்கையை, கைக்கும்-வெறுத்தேகும், சரமதசையில்-அந்தியகாலத்தில், அஞ்சேலென்று-பயப்படாதேயென என்-அடியேனது, கண்முன்-நயனங்கள்முன்னர்-வந்துதோன்றி எனைக்கைக்கொள்--எ-று. (௩)

கடல்சேறுளழனன்றும்பாட்டம்

வந்தனை யேற்றனை யென்புன்சொற் கொண்டனை வன்மனத்தே
வந்தனை யேற்றனை யாவையு மாயினை வான்றரவு
வந்தனை யேற்றனைத் தானொத்த தாளில்வைப் பாய்பலித்து
வந்தனை யேற்றனைத் தீர்த்தாயரங்கத்து மாதவனே,

(இ-ள்) என்-அடியேனது, வந்தனை-ஆராதனையை, ஏற்றனை-அங்கிகரித்தாய், புன்சொல்-ஊனமுள்ள மொழிகளால் தொடுக்கப்பட்ட கவித்துவங்களையும், கொண்டனை-ஏற்றுக் கொண்டாய், (அதுவுமன்றி) வன்மனத்தே-வலியஇதயத்திலும், வந்தனை- எழுந்தருளினாய், ஏற்று-உயர்த்திச் சொல்லும், அன்னை-தாய்(முதலிய) யாவையும்-சகலமும், ஆயினை-நீயே ஆனாய், வான்தர-(அடியேனுக்கு)வைகுந்தம் அளிக்க, உவந்தனையேல்-உவப்பெய்தினையாகில், தன்னைத்தான் ஒத்த-தனக்குத்தானே ஒப்பாகிய- அத்விதீயமான* தாளில்-திருவடியில், வைப்பாய்-இருத்துவாய். பலித்துவந்தனை-பலியாகியதுவந்தனையை, ஏற்றலாகிய வேதனையை* (அன்றிக்கே) பலித்துவந்தனை-இரத்தலை-ஏற்றனை-இடபவாகனமுடையசிவனுக்கு, தீர்த்தாய்-ஒழித்தவனே, அரங்கத்து-திருவரங்கத்தில் (துயில்கூரும்) மாதவனே-இலட்சுமிநாயகனே, பின்னைகேள்வனே-எ-று.

மாதங்கத் தானை யரங்கனை வஞ்ச விலங்கையிலே
மாதங்கத் தானை யிருதிங்க டாழ்த்துப்பின் வாம்பரிதேர்
மாதங்கத் தானை வலத்தானை முன்வதைத் தானைத்தன்பால்
மாதங்கத் தானை வைத்தானை வைத்தேனென் மதியகத்தே

(இ-ள்) மா-மகத்தாகிய—தங்கத்தானை-கனகாம்பரம் (தரித்த) பொன் ஆடை (புனைந்த) * அரங்கனை, வஞ்சன்-தூர்த்தனான இராவணனது— இலங்கையிலே-இலங்காபுரியிலே—மா-(திருமகளாகிய) சீதாபிராட்டியார்—தங்க-இருக்க. தான். ஐஇருதிங்கள்-பத்துமாதம், தாழ்த்து-கழித்து, பின் அதன்மேல், வாம்பரி-தாவுகிறதுரகங்களிலும். தேர்-இரதங்களிலும் மாதங்கம்-கஜங்களிலும், தானை-பதாதிப்படைகளிலும், வலத்தானை திண்ணியனான இராவணனை, முன்வதைத்தானை-முன்னர் தேய்த்தவனை தன்பால்-தனது (வலது) பாரிசத்தில் மாது அங்கத்தானை-அர்த்தநாரீச்சுரனை, வைத்தானை-உடையவனை-என்மதியகத்து - அடியேனது மனத்தினுள்ளே, வைத்தேன்-இருத்தினேன்—எ-று (௰௧)

மதிக்க வலைப்புண்ட வெண்டயிர் போல மறுகுறுமென்
மதிக்க வலைப்புண் டணிகின்றிலேன் மண்ணும் வானகமு
மதிக்க வலைப்புனல் சூழரங்கா நின் மனத்தருடா
மதிக்க வலைப்புன் பிறப்பினி மேலும் வருங்கொலென்றே

(இ-ள்) அலைப்புனல்சூழ் அரங்கா-திரைகளை உடைய (காவிரி)நதிசூழ்ந்த அரங்கநகருடையாய், புன்பிறப்பு-இழிவுடையஜென்மமானது இனி மேலும்-இன்னமும், வருங்கொல்என்று-(தொடர்ந்து) வருமோஎன, மதிக்க-மத்திக்க, கடைய * அலைப்புண்ட-துளும்பல்உற்ற, வெண்தயிர் போல-வெண்மைபொருந்திய ததிபோல, மறுகுஉறும்என்-கலக்குதல் பொருந்திய அடியேனது, மதி மனத்தின், கவலைப்புண், கவலையாகியவிரணம். தணிகின்றிலேன்-ஆறப்பெறகில்லேன், மண்ணும்வானகமும் - மண்ணவரும் விண்ணவரும், மதிக்க-கருதும்படிக்கு, நின்-உனது, மனத்து அருள் இதயத்திருந்துண்டாகும் கிருபையை, தாமதிக்க அல்லை - (அளிக்க) ஜாலம் செய்யாதிருப்பாயாக—எ-று (௰௨)

வருந்து வரைப்பட்ட மங்கைய ரெண்மர் மணங்களைக்க
வருந்து வரைப்பட்ட வாயரங்கேசனை வஞ்சப்பகை
வருந்து வரைப்பட்ட வேழமட்டானை மறந்துலகோர்
வருந்து வரைப்பட்ட வீப்போன் மடந்தையர் மால்வலைக்கே

(இ-ள்) துவரை-துவாரகாபுரியில், வரும்-அவதரித்த, பட்டமங்கையர் பட்டத்துத்தேவியர்கள், எண்மர்-எட்டுப்பேர்களுடைய, மணங்களை-இ

நயங்களையும், கவரும்-கிரகிக்கப்பட்ட, துவபவளம்போலும், ஐ-சுந்தரம், பட்ட-தூத்த வாய அரங்கேசனை-திருஅதரமுடைய அரங்கநாதனை, வஞ்சப்பகைவர்-கொடூரமுள்ள பகைஞர்கள், உந்துசெலுத்திய, வளைப்பட்ட (பொன்) அசலம்-அனைய, வேழம்-களிற்றை, அட்டானை-மாரணஞ்செய்தவனை, மறந்து-கடைப்பிடியாது, அயர்வுற்று * உலகோர் மேதினியோர், ஐ-சிலேஷ்மத்தில் பட்ட-சிக்கிய, ஈப்போல்-ஈயென்ன, மடந்தையர் மடவாரது, மால்-காமமென்னும், வலைக்கு-கண்ணியிலே, (அகப்பட்டு) வருந்துவர்-இடுக்கணெய்துவார்கள்—எ-று (௰௩)

மாலைக்கல் லார மடவார் புண்ணாக்கையில் வாஞ்சைவைத்து
மாலைக்கல் லாரம் புலிக்குழை யாநிற்பர் மாய்விப்பதோர்
மாலைக்கல் லாரம் புயத்தா ளிவ்வைக்கு மதிலரங்க
மாலைக்கல் லாரஞ் சலியாரென்னேசில மானிடரே

(இ-ள்) சிலமானிடர்-சிறிதுபேர்—கல்லாரமாலை-செங்கழுநீர்த்தொங்கல் (புனையும்)—மடவார்-பேதையரது—புண்-புண்ணாகிய—ஆக்கையில்-அங்கத்திலே—வாஞ்சைவைத்து-காதல்செலுத்தி—மாலைக்கு-அந்திப்போதுக்கும்—அல்-கங்குலில்—ஆர்-பொருந்திய—அம்புலிக்கு-நிலவுக்கும்—மதியத்துக்கும் * ழையாநிற்பர்-மெலிந்திருப்பார்கள்—மாய்விப்பது-ஓர் (இப்படித்தங்களை) தேய்க்கிற-ஒரு—மாலை-காமமயக்கத்தையும்—கல்லார்-அகழார்கள்—அம்புயத்தாளில் (சரணைய்தியவளை) அரவிந்தப்பாதங்களில்—வைக்கும்-இருக்கிற—மதில்-சப்தப்பிரகாரங்களுடுத்த—அரங்கமாலை-திருவரங்கமாநகரில் (பள்ளிகொண்ட) திருமாலையும்—கல்லார்-பயில்கிலர்—அஞ்சலியார்-கைகூப்பிலர்—என்னே-இதுஎன்ன அறிவீனமோ—எ-று.

மானிட ராக வரலரி தோர்மண் டலத்திநெறி
மானிட ராகமி லாதவ னறவன் மலரயனை
மானிட ராகமத் தாலன்ப ராய வரங்கத் துனைம்
மானிட ராக மலரடிக் காட்படும் வாழ்வரிதே.

(இ-ள்) ஓர்மண்டலத்தில் (இந்த) அத்விதீயமான பிரபஞ்சத்தின்கண்—மானிடர் ஆக-நரராய்—வரல்-வருதல்—உற்பவித்தல், அரிது-அருமை—(அப்படி உதித்தாலும்) நெறிமான் (ஆதல் அரிது) நீதியுள்ளவன் (ஆகிறது கடினம்)—(அதிலும்) இடர் ஆகம்-விகாரங்கள் பொருந்திய அங்கம் * இல்லாதவன் ஆதல் (அரிது) அறவன் ஆவது (அபூர்வம்)—(அதனினும், மலர் அயனை (உந்திப்) பதுமத்து வாழ்கிற நான்முகனும்— மான்

உமையினை இடர் - இடதுகரத்திலேந்திய பசுபதியும், ஆகமத்தால் ஆகமவிதியால் (மணனஞ் செய்து) அன்பர் ஆய-நேசராகிய (அவனது) கருணைக்குரியவர் ஆகிய * அரங்கத்துள் எம்மானிட - திருவரங்கத்துள் (துயில்கூரும்) எமதுஸ்வாமியினது—ராச செய்ய—மலரடிக்கு-அரவிந்தத்தாள்களுக்கு—ஆட்படும்-தொண்டுபடும்—வாழ்வு-சுகம், அரிதுஅற்பலம்—எ-று. எம்மான் இடம்-என்பதுருப்புமயக்கம் (௰௫)

அரிதா மனாக்கணந் தோலுடுத் தாரய ஞர்க்கரியான்
அரிதா மனாக்கணம் மான்றிருப் பாத மடை யின்சன்மம்
அரிதா மனாக்கணந் தங்கா துயிரவ னூர்வினவில்
அரிதா மனாக்கண மீர்த்தோடும் பொன்னிய ரங்கமன்றே

(இ-ள்) அரி-வாசவற்கும்—தாம்-அனாக்கன்—தன்மருங்கில்- அம்எழில்பெற்ற—தோல்-அதனை—உடுத்தார்க்கு-தரித்தவனான நீலகண்டனுக்கும்—அயனுர்க்கு-வேதாவுக்கும் —அரியான், ஓர்தற்கு அசக்தியன்—அரி-மேற்கூறிய அரிஅரப் பிரமாதியனாயும் யுகாந்தத்தில் கபளீகரித்து அரிப்பதனுல்) அரியென்னும் நாமம் பெற்றவன்—தாமனாக்கண்-அப்புஜநேத்திரங்களையுடைய—அம்மான்-ஸ்வாமி (அவனது திருப்பாதம்- திருவடிகளில்—அடைமுன் சேருங்கள்—(அடையில்) சென்மம்அரிதாம் - பவம் இல்லாமல்போம்—உயிர் அனாக்கணம் - (இனியிந்த) ஆன்மா-அனாக்ஷணமேனும்—தங்காது - (வேறொருகூட்டில்) பொருந்தாது - அவன்ஊர்-அவனுடைய இருப்பது—வினவில்- (எவனெனக்) கேட்கில்—அரி-கண்டரவங்களையும்—தா-தாவுகின்ற—மனாக்கணம்- கானக்குதிரையின்கூட்டங்களையும்—ஈர்த்து- இழுத்துக்கொண்டு—ஓடும் ஓடிவராநின்ற—பாயும் * பொன்-காவேரி (சூழ்ந்த) அரங்கம்—எ-று அன்று—ஏ-அசை ( )

அரங்கா துவார்கணை கண்வள்ளை கோங்கி னரும்புமங்கை
அரங்கா துவார்முலை யென்றைவர் வீழ்ந்தன ராடரவின்
அரங்கா துவாரமி லாமணி யேயணி யார்மதில்சூழ்
அரங்கா துவாரகை யாயடி யேனுன் னடைக்கலமே

(இ-ள்) மங்கையர்-கன்னியரது—கண்-நயனங்களை—அரம்-அரத்தினல்—காது-அராவப்பட்ட—வார்கணை-நெடியஅம்பு—அம்காது-எழிற்செவியை—வள்ளை-வள்ளைக்கொடி—வார்முலை-கச்சிறுக்கிய கொங்கைகளை—கோங்கின்-ஓரழலினது—அரும்புமுகை-என்றுஎன-உவமித்து—ஐவர்-பஞ்சேந்திரியங்களாகிய ஐந்துபேர்—வீழ்ந்தனர்- காமுற்றனர்—ஆடு-ஆடுதல்செய்யும்—அரவின் அரங்கா-திருவநந்தாழ்வானை இடமாகவுடைய

னே—துவாரமில்லா-அருவில்லா—மணியே-மாணிக்கமே—அணி-சுந்தரம்—ஆர்-கிளரும்—மதில்-பிராகாரங்களால்—சூழ் அரங்கா—சூழப்பட்ட அரங்கநகருடையாய்—துவாரகையாய்-துவாரகாபுரியுற்றவனே—அடியேன்-தாசபூதனாகியநான்—உன் அடைக்கலம்-நினதுகையடையானேன்—எ-று (௰எ)

அடைக்கலத் தாயத்தவர்போ லுடலுறை யைவரையும்
அடைக்கலந் தாயுல கங்கொண்ட தாள்களுக் கண்டமுண்டால்
அடைக்கலந் தாயரங் காவாயர் பாடியி லன்றுநெய்பால்
அடைக்கலந் தாய்வைத்து வாய்நெறித் தூட்டவழு மையனே

(இ-ள்) அண்டம்-அண்டங்களை—உண்டு-அருந்தி—ஆல்-அடை-வடபத்திரத்தில்—கலந்தாய்—சேர்ந்து பள்ளிகொண்டவனே—அரங்கா, அன்று-அன்னவதாரகாலத்தில்—ஆயர்பாடியில்-திருவாய்ப்பாடியில், இடைச்சேரியிலே-தாய்-அன்னையாகிய அசோதைப்பிராட்டியார்—நெய்-நெய்யினை—பாலடைக்கலம்-பாலடையாகியகலத்திலே—வைத்து-வார்த்து—வாய்—உன்திருவாயை—நெரித்து-நெரியச்செய்து—ஊட்ட-உண்ணுவிக்க—அழும்-(ஒன்றும் அறியாச்சிறுகுழவியென்ன) ரோதனஞ்செய்யும், ஐயனே-அப்பனே—தாயத்தவர்போல்-தாயாதிகளைப்போல—பங்காளிகளைப்போல * உடலுறை-(எமது) மெய்யில்குடியிருக்கும்—ஐவரையும்-பஞ்சேந்திரியங்களையும்—அடைக்கலம்-நிக்கிரகிக்கமாட்டோம்—தாய்-தாவி—உலகம்-புவனங்களை—கொண்ட-அளந்துகொண்ட—தாள்களுக்கு-திருவடிகளுக்கு—அடைக்கலம்—கையடையானோம்—எ-று. (௰அ)

ஐய மருந்திவை யுண்ணென்று மாதரட் டூட்டுஞ்செல்வம்
ஐய மருந்தினைப் போதே யவரின்ப மாதலினால்
ஐய மருந்தியக் கங்குறு காமுன் னரங்கர்க் கன்பாய்
ஐய மருந்தியம் வாழ்பின்கண் மேலுமக் காநந்தமே

(இ-ள்,) ஐய-ஐயா—மருந்து-தேவாமிர்தத்துக்கு ஒப்பாகிய—இவை-இவ்வுணவுக்களை—உண் அருந்து—என்று-என (அன்புடன்கூறி) மாதர்-பெண்கள்—அட்டு-சமைத்து—ஊட்டும்-அருந்தச்செய்யும்—செல்வம்-ஐசுவரியம்—செல்வ வாழ்வினது நிலைமை*ஐயம்-சந்தேகம்—அருந்தினைப்போதே-சிறியதினையளவு போழ்தே—அவர்-அந்தப்பெண்களுடைய—இன்பம்-போகரசமும்—ஆதலினால்-ஆகையால்—ஐ-கோழை—அமரும்-(நெஞ்சில்) பொருந்துகிற—இயக்கம்-கலக்கமானது—குறுகாமுன்-நெருங்குதற்கு முன்னமே—அரங்கர்க்கு-அன்பாய்-நேசர

ரிய—ஐயம்-அநுதியும்-யாசகம் (செய்து) பட்சித்தாயிலும்—வாழ்மி ன்கள்-உய்யுங்கள்—மேல்-அநந்தரம—இனிமேல்*உமக்கு—நுங்களுக்கு ஆநந்தமே(இது) பேரின்பந்தான்—எ-று- (௰௯)

நந்த மரங்கனை மாகடலேழு நடுங்கவெய்த
நந்த மரங்கனைப் பற்றுநெஞ் சேவினை நையுமுன்கை
நந்த மரங்கனை யார்மயல் போம்வரு நற்கதிவா
நந்த மரங்கனை வர்க்குமெஞ் ஞான்று நரகில்லையே

(இ-ள்) மரம் (மரா மரங்கள்—நந்த கெடவும்—கனை- சத்திக்கிற—மா-பெருமையுற்ற—கடல்எழும்-சத்தசமுத்திரங்களும்,நடுங்க-அதிரவும்—எய்த (அஸ்திரப்) பிரயோகஞ்செய்த—நம்தம்-நமது—(அன்றிக்கே நந்தும் (நாளுக்குநாள்)விர்த்தியடைந்துகொண்டேவரும் லாவண்ணியத்தையுடைய—அரங்கனை, நெஞ்சே-மனமே—பற்று-பேணு, கருது (அப்படிச்செய்தனையேல்,வினை- (பிறத்தல்இறத்தல்என்னும் இரண்டு) கண்மங்களும்,நையும்-நசித்துப்போம்—முன்கை-முன்னங்கையில்;நந்து சங்கவளைகள்—அமர் பொருந்தப்பட்ட, அங்கனையார்-தெரிவையரிடத்து (விஷயம்)மயல்-(காம,மயக்கமும்—போம்-அறும். நற்கதி-நல்லபதவி,வரும்சித்திக்கும்,வானம். பிதுர்க்களுலகத்திலே—தமர் நமதுஉறவினராய் அங்கு-அங்குள்ள, அனைவருக்கும்-யாவருக்கும், எஞ்ஞான்றும்-எந்நாளிலும்,நரகு-துர்க்கதி இல்லை—எ-று (௨௰)

நரகந் தரம்புவி யிம்மூன் றிடத்து நனிமருவி
நரகந் தரங்கித்து வெங்காலற்கஞ் சுவர்நாயகவா
நரகந் தரம்புட் பிடரேறரங்கர்நல் லாக்குலத்தி
நரகந் தரங்கமுற் றூரடி யார்க்கு நமனஞ்சுமே.

(இ-ள்) நரகு-பாதாளலோகம், அந்தரம்-சொர்க்கலோகம்,புவி-பத்திய லோகம், இம்மூன்றிடத்தும் (என்னும்) இச்சமூன்றுலகத்தின்கண்ணும், நனி-சாலவும், மருவினர்-பொருந்தினபேருகள்,அகம்-மனம், தரங்கித்து-துன்பமுற்று, வெம்காலற்கு-கொடூரமுள்ள அந்தகனுக்கு, அஞ்சுவார்கள்நடுங்குவார்கள், நாயக- சிரேஷ்டமான, வானரகந்தரம் (வானரமாகிய) அநுமாரது கழுத்திலும்,புள் கருடப்பறவையினது, பிடர்-தோணிய மேலிலும், ஏறு எழுந்தருளப்பட்ட, அரங்கர், நல்-நன்மைபொருந்திய, ஆக்குலத்தினர்-இடைக்குலத்தவருடைய, அகம்-கிரகத்தும் தரங்கம்-க்ஷீராப்பதியிலும், உற்றூர்-வாழுமவர்; அடியார்க்கு, நமன்- (அந்தக)காலன் அஞ்சும்-பயப்படுவான்எ-று. (௨௧)

அஞ்சக் கரத்தலைக் கங்கைய னேற்றலு மஞ்சிறைய
அஞ்சக் கரத்தலைக் குண்டிகை யாண்மண்டை யங்கை விட்டே
அஞ்சக் கரத்தலைச் செய்துபித்தேக வருளரங்கன்
அஞ்சக் கரத்தலை வன்றா ளலான்மற் றரணிலையே

(இ-ள்) அஞ்சு அக்கரம்-பஞ்சாக்ஷரத்தையுடைய, தலைக்கங்கையன்-கங்கைத்தலையன், மந்தாகினியைச்சிரத்திலுடையசிவன்* ஏற்றலும்-இரக்குமளவில், அம்-அழகிய, சிறைய-சிறகுகளைக்கொண்ட, அஞ்சம்-அன்னவாகனமும், கரத்தலை-அஸ்தத்தில், குண்டிகையான்-கமண்டலமுமுடையபிரமனது. மண்டை-கபாலமானது, அங்கை-உள்ளங்கையினை, விட்டு-நீங்கி, கரத்தலைச்செய்து-கரந்து, ஒளித்து* அஞ்ச-நடுங்கவும், பித்து-பிராந்தி, ஏக, நீங்கவும், அருள்கருணைசெய்யும், அரங்கன், அம்-சுந்தரமுள்ள, சக்கரத்தலைவன்-ஆழிப்பிரான்-(அவனுடைய) தாள் அல்லால்-திருவடியல்லாது, மற்று-வேறு, அரண்-காப்பு, இல்லை-அவ்வரனுக்கு இல்லாமற்போயிற்று-எ-று. (௨௨)

இலங்கையி லாதர னைங்கரன் மோடி யெரிசுரத்தோன்
இலங்கையி லாதமலைபான வீச னிரிய வெம்போர்
இலங்கையி லாத படிவா ணனைச்செற்ற வென்னரங்கன்
இலங்கையி லாதவன் போகக்கண் டானென் னிதயத்தனே.

(இ-ள்.) இலங்கு-வயங்கும், அயில்-வேலினை, ஆதரன்-அவாவிய ஆறுமுகன் ஐங்கரன்-ஐந்துகரங்களையுடையயானைமுகன், மோடி-பத்திரகாளி, எரிசுரத்தோன்(சுடுகாட்டினையுடைய)வீரபத்திரன், இல்லம்-வீடு, கையிலாதமலை ஆன-கைலாசகிரி ஆகிய, வங்கவனா ஆகிய* ஈசன்-நக்கன், இரிய-(இவர்களனைவரும்) முறிந்தோட, வெம்போரில்-உக்கிரமான அமர்க்களத்தில், அம்-அழகான, கைஇல்லாதபடி-கரங்கள் அறும்வண்ணம், வாணனை-வாணாசுரனை, செற்ற-கோபித்த என் அரங்கன், இலங்கையில்-இலங்காபுரத்தில், ஆதவன்-கதிரவன், போகக்கண்டான்-மேவப்பணிந்தவன், என்இதயத்தன்-அடியேனது இதயகமலத்துற்றனன்—எ-று. (௨௩)

அத்தனை வேதனை யீன்ற வரங்கனை யைம்படைசேர்
அத்தனை வேதனை வாய்வைத்த மாயனை யாரணங்கோர்
அத்தனை வேதனை த்தீர்த்தானைச் சேர்க்கி லாயிரஞ்சால்
அத்தனை வேதனை யப்புவன் சாந்தென் றணலணைத்தே

(இ-ள்.) அத்தனை-எப்பொருட்கும் இறைவனை, வேதனை, வேதாவை —ஈன்ற- பெற்ற— அரங்கனை—ஐம்படை -பஞ்சாயுதங்கள்—சேர்—

கலர்த—அத்தனை - கரத்தையுடையவனை—வேதனை - வேய்தன்னை—வேய்க்குழலினை * வாய்வைத்த - திருவாயினிடத்து (ஊதுதற்கு) வைத்த—மாயனை ஆச்சரியரூபனை—ஆரணங்கு-பார்வதியை—ஓர் அத்தன் - ஒருபாகத்துடைய அரன்—கைமெலியும்—வேதனை - வருத்தத்தை—தீர்த்தானை-ஒழித்தவனை—சேர்க்கிலள்- சாரச்செய்கில்லாள். அன்னை-என்தாய்—(ஆனால்) ஆயிரம்சால்அத்தனை ஆயிரம்சால் அவ்வளவு—வேதுவெப்பத்தை—சாந்துஎன்று-சந்தனக்குழம்பென—அனல்- அழலை—அரைத்து அப்புவள்-பூசுவள்—எ-று (உ௪)

அரைக்கலை வேலை யுடுத்தமண் பல்பக லாண்டுபற்றல்
அரைக்கலை வேலை யுடைவேந் தர்வாழ்வெண்ணலைவனையும்
அரைக்கலை வேலை யவர்க்கே புரினவயென் றாலுநெஞ்சே
அரைக்கலை வேலை யரங்கனுக் காட்பட வாதரியே

(இ-ள்) அரைக்கலை-மருங்கி லாடையென்று—வேலை.வாரிதியை—உடுத்த-வளைந்த—மண்-ஞாலத்தை—பல்பகல்-அநந்தநாள்வரைக்கும் ஆண்டு.புரந்து—பற்றலரை=மேவலரை—கலை - நிலைகுலைத்தோடச்செய்கின்ற—வேலை-வேலாயுதத்தை-குறறத்தை*உடை-வேந்தர் நிருபரது-வாழ்வு-(நிலையற்ற) வாழ்க்கையை—எண்ணல்(நிசமெனக்)கருதாதே—நினையேல்* ஐவரையும்-பஞ்சேந்திரியங்களையும்—அரைக்கனலை- அடக்கமாட்டாய்—அவர்க்கே-(அவைசெல்வழியிலேயேசென்று) அவைகளுக்கே—வேலைபுரிவைஎன்றாலும்- பணிவிடைசெய்வாயெனினும்—நெஞ்சே-மனமே—அரைக்கலைவேலை- அரைக்கலப்போதேனும்—அரங்கருக்கு—ஆட்பட- அடிமைசெய்ய—ஆதரி- வாஞ்சைகொள்—எ-று. (நெஞ்சேமன்னவர் வாழ்வு கருதாதே—அரங்கனுக்குத் தொண்டுபட இச்சைகொள் எனக்கூட்டுக.)

ஆதவ னந்தரந் தோன்றுமற் கன்மழை யார்த்தெழுநாள்
ஆதவ னந்தர வெற்பெடுத் தானடி யார்பிழையார்
ஆதவ னந்தரங் கத்தானரங்க னடியெனென்னுள்
ஆதவ னந்தரங் கண்டுர் வினைவந் தடைவதுவே

(இ-ள்.) ஆதவன்-தினகரன்—அந்தரம்-விண்ணில்—தோன்றாமல் உதிக்காவண்ணம்-கண்ணுக்குப் புலன்படாதவாறு*கல்மழை- பாஷாணவருஷம்—ஆர்த்து-ஒலித்து—எழும்நாள்-விஞ்சுகிறபோது ஆ-கோக்கள்—பசுவினங்கள்*தவனம்தர-தவிக்க—வெற்பெடுத்தான்-(கோவர்த்தன)கிரியை (குடையாகஎடுத்து) பிடித்தவன்—அடியார் தொண்டர்களுடைய—பிழை செயிர்களை—பாராதவன்—நோக்காதளிப்பவன்—அந்தரங்கத்தான்-(அ

லசராசரங்களிலும்)பரமாகசியமாக நிறைந்திருப்பவன்—(அர்த்தாந்தரம்)அம்-அழகிய—தரங்கத்தான்-க்ஷீராப்திசயனன்—அரங்கன்— அவனுடைய அடியேனென்று-தாசபூதனேனென—உள்ளாத-கருதாத—அநந்தரம்-பிறகு—வினை-எல்லாத்தீவினைகளும்—வந்து- அடைவது—எய்துவது—கண்டீர்—எ-று. (௨௬)

அடையப்பன் ஞைகவ் கடிவா யமுதாக வங்கிகுளிர்
அடையப்பன் ஞைக மருப்பா யுதமிற வன்றுகுன்றால்
அடையப்பன் ஞைமிசைதாங்காப்பாலற்கருள்செய்ததால்
அடையப்பன் ஞைவ கரியா னரங்கனெட் டக்கரமே.

(இ-ள்.) அடை- அடைகிடக்கப்பட்ட—அப்பால்காகம் அந்த அநந்தசர்ப்பங்கள்—கடிவாய்-கடித்துவிட்டது—அமுது-அமிர்தம—உக-சிந்தவும்—அங்கி-வன்னி—குளிரடைய-தப்பமொத்தவும் பல்—(நான்கு)கோட்டினையுடைய—நாகம்-(ஐராவதமென்னும். வேழத்தின்மருப்பு ஆயுதம்-தந்தங்களாடிய படைக்கலம்—இற-ஒடியவும் அன்று—குன்றால்- வரையினால்—அடை-தடுக்கப்பட்ட—அப்பு மூங்கீர் அந்நாகமிசை-அந்தமலையின்மேல்—தாங்க;(அச்சிருவனை எந்தவும்—பாலற்கு-(மைந்தனாகிய) பிரகலாதாழ்வானுக்கு—ஆல் அடைஅப்பன்- வடபத்திரத்துள்(துயில்கூரும்)எந்தை—ஆகமகாரியான் அஞ்சனமேனியன்—அரங்கன்—எட்டு அக்கரம் அஷ்டாட்சரம—அருள்செய்தது-கருணைபண்ணிற்று (ஆகையினால்) அந்தத்திருமந்திரத்தை ஆசாரியரிடத்தில் பெற்றுக்கொள்ளக் கருதுங்கள்-எ-று

அக்கர வம்புனைந் தாரய னாரிடை யாயிருநால்
அக்கர வம்பு மலராள் கொழுந னரங்கன்செய்கோல்
அக்கர வம்புயன் றன்மூ லமென்ப தறிவித்திடான்
அக்கர வம்புவி மேல்வே ழமேவெளி யாக்கியதே.

(இ-ள்;) அக்கு-அஸ்திமையுப்—அரவம்- சர்ப்பத்தையும்—புனைந்தார் தரித்தசிவனுக்கும்—அயனார்-பிரமனுக்கும்—இடையாய்- நடுவுற்றவனுமி—இருநால்அக்கர- அஷ்டாட்சரத்தையுடைய—அம்புமலராள்- நீரிலுள்ளதாமரையில்வந்தவள்—கொழுநன் மணாளன்—செம்-சிவந்த—கோலம்-சுந்தரமுள்ள—கர அம்புயன்-தாமரைக்கையன்—தான்மூலம்என்பது(யாகும்)தானேகாரணனென்பதை அறிவித்திடான்-வெளிப்படுத்தான்—அக்கரவு அந்தமறைவை—அம்- அழகிய*நீர்சூழ்ந்த*புவிமேல்-குவலயத்தின்கண்—வேழமே-கஜேந்திராழ்வானே—வெளியாக்கியது- பகிரங்கப்படுத்தினன்-எ-று கர அம்புயன்தான்மூலமென்பதறிவித்திடார்எனப்பாடமாயின்

தாமரைக்கண்ணனின் காரணவஸ்துவெனச்சிலர், மனதுக்குக்காதலாமதை
யென விளங்குறினும், வெளிக்குரைக்கிலரெனப்பொருள் உரைத்துக்
கொள்க-எ-று. (௨௮)

ஆக்குவித் தார்குழ லாளரங் கேசன் பால்விதுரன்
ஆக்குவித் தா வடிசிலுண் டார்கட லாடையகல்
ஆக்குவித் தாறி வற்றேனைத்தடி யார்க்கடிமை
ஆக்குவித் தாரடி யேயடி யேன்றுய்க்கு மாரமுதே.

இ-ள். குழலாள்-வேய்ங்குழலான் வேணுகானத்தினால் ஆ(சிகழிப்) பசுவினங்களை, குவித்தார்-(ஓரிடத்து) திரளாகக்கூட்டியவர், அரங்கேசன் விதுரன், ஆக்கு-சமைத்த, உண்டார்-அருந்தியவர்; கடல் ஆடை-சமுத்திரமாகிய தானையை, அகலா-நீங்காத, கு-ஜெகத்துக்கு, வித்தார-காரணர், அறிவு-அற்றேனை, புத்தியில்லாத அடியேனையும் தம்அடியார்க்கு-தமதுதொண்டர்களுக்கு அடிமை ஆக்குவித்தார்-தாசனாகச்செய்தவர், அடியே-திருவடிகளே, அடியேன் துயக்கும்-பசிக்கும், ஆர்-கிடைத்ததற்குஅரிய, அமுது-தேவாமிர்தம்-எ-று. (௨௯)

ஆரா தனஞ்செய்து கண்டனின்கீர்த்தி யறைவன்றிரு
ஆரா தனஞ்செய்வன் வேதாவன்று லடியேன்புகழ்கைக்கு
ஆரா தனஞ்செய்ய போதாத்திருமக ளாகபல்பூண்
ஆரா தனஞ்செயன் பாகாவரங்கத் தமர்ந்தவனே

இ-ள். ஆதனம்-வீற்றிருக்கும்பீடிகை, செய்யபோதாம்-செந்தாமரைமலராகிய திருமகள்-தாக்கணங்கு(உறையும்) ஆக-வக்ஷஸ்தலமுடையாய் பல்பூணா-பகுவிதபூஷணங்கிருதனே, தனஞ்செயன்பாகா - பார்த்தசாரதியே. அரங்கத்து அமர்ந்தவனே உற்றவனே ஆராத-புசிக்கக்கூடாமநிறையாதநெஞ்சுஎய்து-ஆலகாலம்சேரும், கண்டன் மிடற்றினையுடையசங்கரன், நின்கீர்த்தி-உனதுகல்யாணகுணங்களை, அறைவன் - கொண்டாடுவான், வேதா-ஆரணன் திருஆராதனஞ்செய்வனென்றால்- அர்ச்சனைபுரிவானெனில் அடியேன் புகழ்கைக்கு(உன்னை)பால ஆர்-அவ்விருவருள் யார்-எ-று. (௩௰)

அமரா வரம்பையரி னல்லார் பரைந்திக் காப்பெடுப்ப
அமரா வரம்பையரி வேல்வேந் தர்சூழமண்ணாண்டிருந்தோர்
அமரா வரம்பையில் கான்போ யிறந்தனராதலின்விடு
அமரா வரம்பையின் மஞ்சாரரங்கருக் காட்படுமே.

இ-ள். அமர்-அம்மையில், தேவசம்பையைக்காட்டிலும், நல்லார்-நல முற்றவர், பலர்-அனேகர். அந்திக்காப்பெடுப்ப- திருவந்திக்காப்பெ டுக்கவும், அமா-போர்வேயுடைய, ஆம்-அதனால், பயில்-பயின்றாவ பட்ட, வேல்-வேலாயுதத்தையுடைய, வேந்தர்-மன்னர், சூழ-புடைதங் கவும், மண்-இந்தபூமியை, ஆண்டு அளித்து, இருந்தோர்-செல்வத்துட னிருந்தவண்டமேன்மையாரும், ஆம்மாம் - அந்தவிருக்ஷங்களில், வாம ளையில்-அவதிஅற்ற, அரண்-ஆரண்ணியத்திற்கு, போய்-சென்று, இறந்த னர்-மாய்ந்தார்கள், ஆகலின்-ஆகையால், விடுஅமர- மோட்சத்தில் உறை கு, அம்மையில்-தரணியில், பற்ற-கொண்டல்கள், ஆர்-தங்கும், அரங்கரு க்கு-திருவரங்கநாதனையவருக்கு ஆட்படும்-தொண்டுபடுங்கள்-எ()

ஆவா கவந்த னடுமே தகுளபரி யானை திண்டேர்
ஆவா கவந்தனிற் செற்றி லங்கேசனை யட்டவல்வில்
ஆவா கவந்தன் புயந்துணித் தாயரங் காமுளரி
ஆவா கவக்கம் அடிமையார்க்கன்ப னவதற்கே.

இ-ள். பரி-குதிரைகளையும், யானை-கஜங்களையும், திண்-திடமுள்ள, தே ர்-ரதங்களையும், ஆள்-பதாதிகளையும், ஆகவம்தனில் - போர்க்களத்திலே, செற்று-செயித்து, இலங்கேசனை-இலங்கைக்கரசனை, அட்ட-சங்கரித்த, வல் அடலார்ந்த, வில்லவனா-கோதண்டனே, கவந்தன்- கவந்தனென்னும் அரக்கனது, புயம்-தோள்களை, துணித்தாய்-அறுத்தவனே, அரங்கா முள ரிமாள, ஆக-கமலைமார்பனே, அந்தம்இல்-முடிவு அற்ற, உன்தேவரீருடை ய, அடியார்க்கு-தாசர்களுக்கு அன்பன் ஆவதற்கு-நேசன் ஆகிறதற்காக ஆளாக-அடிமையென, வந்த-நின்சரணையடைந்த அடியேற்கு அருள்- கரு ணைசெய்-எ-று. (௩௨)

ஆவா கனத்த னடியார் மனத்துட் புள்ளானவொப்பில்
ஆவா கனத்த ரரங்கர்பொற்றாளுக் கடிமைப்பட்டார்
ஆவா கனத்த வழுக்குடல்பேணி யறிவிழந்தவ்
ஆவா கனத்த ரிருந்தென்னிராம லென்னம்புவிக்கே.

இ-ள். அடியார்-தாசர்களது, மனத்துள்-இதயகமலத்தின்கண்- ஆவாக னத்தர்-ஆவாகனமாய்எழுந்தருளப்பட்டவர், புள்ளான- கருடப்பறவை யாகிய, ஒப்பில்லா-நிகரற்ற, வாகனத்தர் - ஊர்தியையுடையவர், அரங்கர்- பொன்தாளுக்கு-பொற்புற்றபாதங்களுக்கு, அடிமைப்பட்டார்-ஆட்பட்டா ர்கள், ஆவா-ஐயோ கனத்த - பாரமுள்ள, அழுக்குடல்- மலக்கூரம்

ஷபையை, பேணி- பாதுகாத்து, அறிவிழந்து மதிகெட்டு, அவாஆகு-(தூர்விஷயங்களிலே) காமங்கொள்கிற, அனத்தர்- தூர்த்தர்கள், அம்புவிக்கு-நீர்சூழ்ந்த உலகத்திலே, இருந்தனன்- இருந்தனென்ன(பயன்) இராமலென்-இல்லாதனென்ன தட்டம்)எ-று, (கங)

அம்புவி லங்கை நகர்பாழ் படச்சங்கு மாழியும்விட்டு
அம்புவி லங்கைகொண் டாயரங் காவன் றிளங்கர்பற்றும்
அம்புவி லங்கை யளித்தா யினியென்னை யாசையென்றிப்
அம்புவி லங்கையிட் டேசஞ் சிறையி லடைத்திடவே,

இ-ள். அம்புவிலங்கைநகர்-பூலோகலங்காபுரியிலுள்ளார், பாழ்பட- நாசமுற, சங்கும்-பாஞ்சசன்னியத்தையும், ஆழியும்- சுதரிசனாழ்வானையும் விட்டு-விடுத்து, அம்பு-வாளியும், வில்-கோதண்டமும், அம்கை- சுந்தரகரத்தில், கொண்டாய்- பிடித்தவனே அரங்கா, அன்று-முன்னாளிலே, அம்பு-ஜலத்திலே, இடங்கர்-காவானது, பற்றும்- பிடிக்க விலங்கை-(வலங்குருக்கொண்டிருந்த) கஜேந்திராழ்வானை, அளித்தாய்- இரட்சித்தவனே, இனி இனிமேலும், என்னை-அடியேனை, ஆசையென்று அவாவென இயம்பு-சாற்றப்படுகிற, விலங்கைதலையை, இட்டு-(என்காலில்) பூட்டி, சம்-ஜென்மமெனும், சிறையில், சிறைச்சாலையில், அடைத்திடல், அடைக்காதே எ-று. கச

இடவ மலைக்கும் புயங்க மலைக்கு மிலங்குமகல்
இடவ மலைக்கு மிருங்க மலைக்கு மிறைவசங்க
இடவ மலைக்கும் புனலாங் காலெய்த்த மார்க்கண்டன்கண்டு
இடவ மலைக்கு முலகழி யாதுள் ளிருந்ததென்னே.

இ-ள். இடவமலைக்கும்-நந்திகிரிக்கும், தென்மலைக்கும்ஸ்ரீ புயங்கமலைக்கும்-சேஷகிரிக்கும், வடமலைக்கும் இலங்கும்-விளக்கமுற்ற-அகலிட அமலைக்கும்-பூமிதேவிக்கும், இரும்-பெருமைபொருந்திய, கமலைக்கும் பூமகளுக்கும், இறைவ-தலைவா, சங்கஇட-பாஞ்சசன்னியத்தை இடமாகரத்தேந்தினவனே, அமலைக்கும்-ஆரவாரஞ்செய்யும், புனல்-(தென்திருக்காவேரி) நதி(பாயம்)அரங்கா-அரங்கநகருடையாய், எய்த்த-(பிரளயாந்தியாகாலத்து உலகெல்லாம் அழிவதைக்கண்ணுற்று (மனதிளைத்த மார்க்கண்டன், கண்டிட- நின்உதரத்துட்சென்று (பார்க்க அம்-பிரளயவெள்ள (நீர் அலைக்கும்-அருக்கும், உலகு-புவனங்களெல்லாம் அழியாது-சற்றுஞ் சிதையாது உள்-(திருக்குட்சி) உள்ளே. இருந்தது- தங்கியதென்னே-என்னமாயமோ, எ-று, கரு

இருந்தைகரி லங்க வெளிறு படாதென்செய் நாளுநிம்பத்
திருந்தைதமி லந்தித்தி யாதவைப் போற்புலவர்யாவுங்கற்றாய்ந்
திருந்தயி லம்பன்ன கண்ணார்க் கல்லால்வெண்ணெயில்லிலொ
திருந்தயி லரங்கர்க்கன் பாகியிருக்கிலரே. [ளித்து

இ-ள். என்செய்தாலும், இருந்தை-கரியானது, இலங்க-விளங்கத்தக்கதாக, வெளிறுபடாது-வெண்மைமேவாது நிம்பத்து-வேப்பமரத்தினது இரும்-கைப்பால்பெரிய, ஐதியம், தித்தியாது. இன்சுவைமேவாது, அவைபோல், புலவர்-கவிஞர்-யாவும்சகலகலைகளையும், கற்று-பயின்று ஆய்ந்திருந்து-ஆராய்ந்து இருந்தும்-அயில்அம்புஅன்ன- கூரியவாளிபோன்ற அர்த்தாந்தரம்: உயில்அம்புஅன்ன-வேலினையும் கணையினையும்ஒத்த கண்ணார்க்குஅல்லால்-கண்களையுடையமாதர்க்கு அன்றியிலேவெண்ணெய், நவநீதத்தை, இல்லில்-மனையில், ஒளித்திருந்து, அயில்-புசிக்கும், அரங்கர்க்கு, அன்பாகி-நேசராகி, இருக்கிலர்-உச்சிதர்கள்-எ-று; ௧௮

இருக்குமந் தத்தி லறியா வரங்கன்மண் ணேழுமுண்டுந்
திருக்குமந் தத்திரு வாய்மலர்த் தானெட் டெழுத்தைக்குறி
இருக்குமந் தப்புத்தி யீர்தருநல் வீடெய்தவாகுங்கைபோய்
இருக்குமந் தச்செவிட் டேமன்முந்நீர்கடந் தேறிடிலே.

இ-ள், இருக்கும் - ஆரணங்களும், அந்தத்தில்-முடிவிலே, அறியா-ஒருநற்கெட்டா, அரங்கன், மண்ணேழ்-சப்தலோகங்களையும், உண்டு-கபளீகரித்தும், திரிகரும் - திக்கும், அந்தம்சுந்தரங்களும் - திருவாய்மலர்ந்தான்-அருளிச்செய்தவன், அவன் நெட்டெழுத்தை- அஷ்டாட்சரத்தை, குறியிருக்கும்-சிந்திக்காதஉங்களுக்கும், மந்தப்புத்தி- கூர்மையற்ற அறிவினைஈர்த்து-அறுத்து, நல், நல்ல, வீடு, மோட்சத்தை, எய்தலாகும் அடையக்கூடும், கைபோயிருக்கும்-கரங்கள் அற்றுப்போன, அந்தச்செவிட்டுஊமன்-குருடுஞ்செவிடும்கலந்தஊமையானவன். முந்நீர்கடந்து சமுத்திரங்களையும்தாண்டிப்போய், ஏறிடில்- அக்கரையேறுவானெனில்

ஏறுங் கரியும் பரியுஞ்செற் றான்பசெனென் றுமன்றுள
ஏறுங் கரிமறை யாதலி னூலையம்யா துமக்கிடும்
ஏறுங் கரிய வரங்கர்க்கன் பாய்வினை யென்னுமடி
ஏறுங் கரியு மினிமேற் பிறவி யிடரில்லையே.

இ-ள். ஏறும்-கஞ்சனஉந்திய விடையையும், கரியும்-வேழத்தையும், பரியும்-அசுவத்தையும், செற்றான்-சங்கரித்தவனே, பாவென்று- பாத்தா

வர்பெருமிவன், மன்றுள்ளதும்-அவையேறியுரைக்கும், கரி-சாக்ஷிமை யாகவிருல் ஆரணமாகையிருல், உமக்குயாதுலியம் - உங்களுக்குள ன்னசங்கை, கரிய காளமேகநிறத்த அரங்கர்க்கு, அன்பாய்-நேசராய், ச டேறும்-கரையேறுங்கள், வினையென்றும்இடியேறும்- பூர்வகன்மமாகிய இடியும், கரியும்-கரிந்துபோம், இனிமேல்-அநந்தரம், பிறவிஇடர்இல்லை-ப வநோய்இல்லையாம்-எ-று. (௯௮)

இடாகவக்கிதன்னைப் புன்சிறுதெய்வங்க ளென்செயுமான்
இடாகவன்பிணி மாநாக மென்செயும் யான்வெருவி
இடாகவன்னு புனலிடி கோன்மற்று மென்செயும்வில்
இடாகவன்னரங் கன்றிருத்தாளென் னிதயத்ததே

இ-ள். வில்இட-சார்ங்கதநுவைஇடதுகரத்தேந்திய, ராகவன்-ரகுவ ம்சத்துதித்தவன், அரங்கன், திருத்தாள்-திருவடிகள், என்-அடியேனது இதயத்தது-மனத்தின்கணுற்றன, (ஆதலால்இனி) இடர்ஆக- துன்பம்வி ளையத்தக்கதுஆக, வந்து-நெருங்கி, என்னை புன்சிறுதெய்வங்கள்-சனமுன் ள அற்பதேவதைகள், என்செயும்-யாதுசெய்யமாட்டுவன, மானிடர்- நரர் களது, ஆகவன்பிணி - யாக்கையில்குடிகொள்ளும் கொடியநோய்களும், மாநாகம்-மகாசர்ப்பமும், என்செய்யும்-யாதுசெய்யமாட்டுவன, யான்-நா ன், வெருவிஇட-நடுக்கம்கொள்ள, ராகம்-செக்கர்நிறத்த, வன்னி-தழலும், புனல்-உதகமும், இடி-அசனியும், கோல்-நவக்கிரகமும், மற்றும்- இன்னு ம்பொல்லாங்குசெய்வன யாவும்யாதுசெய்யமாட்டுவன-எ-று. (௯௯)

அத்திரங் காய மெனவுண ரேனெ னாசையுன்கை
அத்திரங் காயத்தி விற்பெரி தானரை யாகிப்பல்வீழ்
அத்திரங் காயக் கிரம்போற் பொறியைந் தழியுமக்கால்
அத்திரங் காயரங் கேசவடி யேனுன் னடைக்கலமே

இ-ள். காயம்-யாக்கை, அத்திரம்என-நிலையற்றதுஎன்று, உணரேன்- ஓர்கிலேன், எனது-அடியேனது, ஆசை-அவாவோ, நின்-உனது, கை-பா ணியால்பிரயோகஞ்செய்த, அத்திரம்-வாளி, காய-தகித்த-அத்தியில்- ஆழி யினும், பெரிது-மிக்கது, நரைஆகி-பலிதமெய்தி, விருத்தபருக்குபல்வீழ தந்தங்கள்உருமிலைச்செய்ய, கிரங்கா- திரைந்து, யந்திரம்போல் சூத்திரம் அற்றபாப்பாவையென்னபொறிகைந்தும்-பஞ்சேந்திரியங்களும், அழியு

டு,இரங்காய்-இரக்கமுற்றளிப்பாய், அரங்கா-ம்அக்காலத்து-வீழும்போது,இரங்காய்-இரக்கமுற்றளிப்பாய், அரங்கா-அடியேன்,உன்அடைக்கலம்-நினதுசரண்புக்கேன் எ-று. ஆல்-அசை ()

கலக்கழுக்கைக்குங் கருத்துடையீரரங் கத்துளிலைக்
கலக்கழுக்கைக்குங் கரிபிட்டுத் துய்த்திருங் காதுபடைக்
கலக்கழுக்கைக்குள் வருவானைக் கண்ணுதலும்விட்ட
கலக்கழுக்கைக்குப் படைகண்டானை வீதியிற்கண்டுவந்தே

இ-ள். கலக்கு-பனைநடமறுகு கலுழச்செய்யும். அழுக்கை - பூர்வகன்மத்தை, கலக்கும்-அலைக்கும், கருத்துடையீர்-நினைவுற்றிருப்பீர்கள், காதுகை,ளாக்கும்-அலைக்கும்,கருத்துடையிர்-நினைவுற்றிருப்பீர்கள், காது-கை,யானைக்குங்கரிக்கும்,படைக்கலம்-ஆயுதங்களையுடையகழை-படையானை, வருவானை-வரப்பட்டவானைக் வருப்பின்னைக்குள்-ஒழுங்கினுள்ளே,வருவானை-வரப்பட்டவானை, அகல-ஒழிய,கூ கண்ணுதலும்-பரமேலோசனனும்,விட்டு-கைவிட்டு, அகல-ஒழிய,கூ தைக்கை-அவனதுருவையப்பட்டகசங்களின்,துப்பைப-குவாவினை, கண்டானை-விழுத்துக்கண்ணுற்றவனை,வீதியில்-திருவீதியில்,கண்டு-பவனி வாகரிசித்து,உவந்து-அகங்களித்து,இலைக்கலம்-பத்திரமாகியபாத்திரத்தில்,கூழ்-அன்னத்தைத், கைக்கும்-கசப்புடைய கரிபதார்த்தங்களை,இட்டு-சேர்த்துக்கொண்டு, துய்த்து-உண்டு, இரும்-இருங்கள், அரங்கத்துள்-திருவரங்கம்பெரியகோயிலிலே-எ-று (௭௧)

கண்டகனவின் பொருள்போ லியாவும் பொய்காலனென்னுங்
கண்டகனுவி கவர்வது மேமெய் கதிநல்கெனக்
கண்டகனவிப் பொழுதே செல்லென்றருள் காரரங்கன்
கண்டகனுவின் புறக்கண்டு வாழ்த்திக் கடிதுய்ம்மினே.

இ-ள். கனவின்-சொப்பனத்தில் கண்ட-பார்த்த,பொருள்போல, வஸ்துக்களென்ன,யாவும்-சாக்கிரத்தில்காண்பனஅனைத்தும்,பொய்-மித்தையே.காலனென்னும்-அந்தகனென்றிசைக்கப்படும்,கண்டகன்-கோரமுள்ளவன்,ஆவி-ஆன்மாவை,கவர்வதுவே-இழுத்துக்கொண்டேகுதலே,மெய்-சாதம்-ஆதலினால் கதி வைகுந்தத்தை, நல்குஎன-அரங்கனாதனைஞ் செவியுருவணம் காதில்கண்டை பலித்துக்கொண்டேதிரிந்த கண்டாகர்ண் எனக்கு தாஎன்றுகேட்க,கண்டகனை-கண்டாகனனே.இப்பொழுதே இக்கணமே, செல்லென்று-அடைவாயாகஎன்றுசொல்லி, அருள்-அளித்த,கார்-படிவத்திலும் கைமமாறு கருதாதளிக்கும் நீர்மையிலும் பயோதரமன்ன, அரங்கன்,அவனைகடிது-ஒல்லையிலே,கண்-நேத்திரங்களுக்கு தக-பாங்குபெற,கண்டு-தரிசித்தும்,நா-ஜிகுவைக்கு,இன்புற-இரதமுண்டாக, வாழ்த்தி-ஸ்துதிசெய்தும், உய்ம்மின்-உஜ்ஜீவியுங்கள்-எ-று.

கடிக்கும் பணிநஞ் சமுதா குந்தீங்குநன் காகும்பாக
கடிக்கும் பணியலர் தாழ்வார் கல்லாமையுங் கற்றவையாங்
கடிக்கும் பணியற மெல்லாமரங்கர் பைங்கன்னித் துழாய்க்
கடிக்கும் பணியொளிக் குந்நல்லபாதங் கருதினர்க்கே.

இ-ள். அரங்கர் பை-சாமளநிறம்பொருந்திய, கன்னித்துழாம்- மஞ்சுளவனமாலையின், கடிக்கும்-மணத்துக்கும், பணிஒளிக்கும்- நூபுரஜோதிக்கும், நல்ல-நன்கமர்ந்த, பாதம்- திருவடிகளை, கருதினர்க்கு-மனனஞ்செய்தவர்க்கு, கடிக்கும், பணி-உரகத்தின்து, நஞ்சு-விடமும், அமுதாகும்-தேவாமிர்தம்ஆம், தீங்குதிவினையும், நன்காகும்-நல்வினையாம், பாக்கடிக்கும்-அவமதிக்கும், பணியலர்-பகைஞரும், தாழ்வார்-பணிவார்கள், கல்லாமையும்-பயிலாதவிஷயங்களும், கற்றவையாம்- பயின்றனபோல்விளங்கும், பணிதாமபுரிந்த, அறம-தருமம, எல்லாமயாவும, கடிக்கும தவறுதலின்றிகாக்கும-எ-று. ௪௩

தினகா ஞர்கனிதீகாற் றொடுங்குஞ் செயலும்விண்மீ
தினகா ஞர்கொண்ட லேழ்செருக் காமையுஞ்சென்றெதிர்மோ
தினகா ஞருயிர் செற்றா ரரங்கர் திகிரிசங்கேந்
தினகா ஞர்நம் பெருமாளமைத்த திருக்கைகண்டே.

இ-ள். தினகரன்- திவாகன், ஆர்கனி- அப்பு, தீ-தேயு, காற்று-வாயுஇவைகளெல்லாம்ஒடுங்கும் தத்தம்எல்லைஇகவாது அடங்கியிருக்கும், செயலும்-காரணமும், விண்மீதில்- அந்தரமிசை, நகரன்- பொன்னகர்க்கிறைவன் ஆக்கினையுட்பட்ட ஆர்-நிறைந்த, கொண்டலேழ்- சப்தமேகங்களும், செருக்காமையும்-தருக்காதது, யாதுகாரணத்தாலெனனின் சென்று எதிர்-நேராகவந்து, மோதின-எற்றின, காசன் காள்என்னும்அரக்கனது, ஆர்-அவனுக்குஅருமையான, உயிர்-ஆவியைசெற்றார்-உடலில்நின்றுநீங்கசெகாபித்தவர்-அரங்கர்- திகிரி-சுதரிசனஆழ்வானையும், சங்கு - பாஞ்சசன்னியத்தையும் ஏந்தின-பிடித்த, கானார்-அஸ்திரத்தையுடையவர், நம்பெருமாள்அமைத்த-நில்லென்றுகுறித்த, திரு சிறப்புமிக்க கை-சாத்தைகண்டேபார்த்ததால்-எ-று. (௪௪)

திருக்கா விரிக்கும் யமுனைக்குங் கங்கைக்குந் தெள்ளமுதாந்
திருக்கா விரிக்குங் கடற்கும் பிரான்றென்னரங்கமென்னத்
திருக்கா விரிக்கு மொழியார்க் குந்நிமெழு காவின்புய்த்
திருக்கா விரிக்கும் தெவ்வாறவனுங்கள் சென்மந்தையே.

இ-ள். திரு-சுந்தரந்திகழும், கா-நந்தனவனங்களை, விரிக்கும்-(அவை வழியாய்த்தவழ்ந்து) பூக்கிடச்செய்யும், யமுனைக்கும்கங்கைக்கும்-யமுனைநதி கங்காநதியைக்காட்டிலும், தென்-தெளிவற்ற, அமுது அமிழ்தன்னைஆம்-நீரினையுடைய, திருக்காவிரிக்கும்-தென்திருக்காவேரிக்கும், கடைக்கும்-க்ஷீரசாகரத்துக்கும், பிரான்ஸ்வாமியினது, தென்கவின்பெற்ற, அரங்கம்என்ன-என்றுஞ்சொன்னாலும்-இயம்ப-அன்பு-காதல், உய்த்து இருக்கச்செலுத்தியிராமல், திருக்குஆவிர்-முடக்கு ஆவிர்கள், இக்கு-கன்னலைமொழியார்க்கு- இனியாவசனங்களையுடையமாதரிடத்தும், தீ- தழலுற்ற மெழுகுஆவிர்-மெழுகுபோலனைந்துருகுவீர்கள் ஆதையால்அவன்- அந்தச்சர்வேசுரன், உங்கள்- நுமது, சென்மத்தை- பவத்தைஇரிக்குமது-நீக்கும்வண்ணம், எவ்ஆறு-எங்ஙனம், எ-று. ௪௯

செனமந் தாங்கரு கருமஞ்சுழிப்பிணி சேலினங்கு
சென்மந் தாங்கதிர் பொன்கோள் கண்மாரி திண் கூற்றசனி
சென்மந் தாங்கவற் றுள்வீழ்வோர்க்கரை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தாங்கவின் றோளரங்கர் திருப்பதமே.

இ-ள். சென்மந்தரங்கம்-சனனமாகிய சாகரத்துள், கருமம்-சுழி- இருவினையாகியசுழலில், பிணிசேல்இனம்-நோயாகியமச்சக்குலங்களினாலும், குசென்-செவ்வாய், மந்தர்-சனி, அம்-சுக்கிர், எழில்பொருந்தியபானு பொன்-வியாழம்முதலாகிய கோள்கள் கிரகங்களாகிய, மாரி-மழையினாலும், திண்-வலியுடைய; கூற்று-சண்டனென்னும், அசனி- இடியினாலும், செல்-வேதனைபட்டுக்கொண்டிருக்கிற, மந்தர் - புத்திக்கூர்மையில்லாதவரையும், அங்கு- அந்தபவாப்தியுள்ளும, அவற்றுள் பிறகூறியவற்றுள்ளும், விழுவோர்இனிமேல்விழுபவரையும், கரைசேர்க்கும்-கரையேற்றும், வங்கம்-நாவாய், செல்-மேகங்கள்தவழும், மந்தரம்-மந்தரகிரிபோல், கவின்-பொலிவுடைய-தோள்ஆர்-வாகுகள்பொருந்திய அரங்கர்-அரங்கநாது, திருப்பதமே-திருவடியே-எ-று. (௫௰)

பதக்க மலங்க லணிமார்ப பொன்னி படிந்திமையோர்
பதக்க மலங்க ளருசோரக்க பகட்டயிரா
பதக்க மலங்கரிக் தார்வோன் சிவனயன் பார்க்கவந்தன்
பதக்க மலங்க ளடிபேன் றலைக்கென் றபாவிப்பதே

இ-ள். பதக்கம்-ஆரங்களையும், அலங்கல்-தாமங்களையும், அணி- புனையும், மார்ா-நிறமுடையாய், அகலமுடையவனேகபொன்னி - தென்திருக்காவேரியில்-படிந்து-தோய்ந்து, இமையோர்-இமையநாட்டத்துவானவர்

பதக்கம்-பாதங்களையும் மலங்கள்- தோஷங்களையும், அறு-நீக்கும், சீர் அரங்க-சிறப்புற்ற அரங்ககருடையாய், அயிராபதப்பகட்டு- வெள்ளையானைத்தின- கம்- மத்தகத்தை, அலங்கரித்து-சிங்காரஞ்செய்து- வர்வோன- கடாவுகிற ஆயிரங்கண்ணனும்,சிவன்- முக்கண்ணனுமஅயன் எண்கண்ணனும்,பார்க்க-காண,வந்து-மேவி-உன்-நின து,பதக்கமலங்கள்-சாறுளவிருங்களை, அடியேன்,சிரத்து- சென்னியிலபாலிப்பதுஎனறு-இருததுவெதெஞ்ஞான் று-எ-று; ௨௭

பாலனஞ் செய்யமா நாடான் டிபூணொடு பட்டணிந்து
பாலன்னஞ் செய்ய கலத்துண்டு மாதர்பல் போகத்தையும
பாலனஞ் செய்ய விருப்பதி லையம்பருகிநந்தன்
பாலனஞ் செய்யவள் கோமா னரங்கம்பையில்கைநன்றே.

இ-ள், பால்-வெண்ணிறந்த,அன்னம் ஓதிமப்பறவைகள்,செய்பணைகளில்,அமர்-பொருந்தியிருக்கிற,நாடுவெண்மைபொருந்தியநிலத்தை,ஆண்டு-புரந்துபூணொடுசகலபூஷணங்களோடு,பட்டு-பட்டுவர்க்கங்களையுமஅணிந்து-தரித்துபாலன்னம்-க்ஷீரான்னம், செய்ய-நேர்மையுற்ற கலத்துபாத்திரத்துள்,உண்டு-நுகர்ந்து-மாதர்பல்போகத்தையும் பெண்முதலாகியஅஷ்டபோகங்களையும்,பாலனஞ்செய்ய-பரிபாலிக்க, இருப்பதில் இருக்கிறதிலும்,ஐயம்-யாசித்தலை,பருகி-அருந்தி,நந்தன்-நந்தகோபனுக்கு,பாலன்புதல்வ,அம்-அழகிய,செய்யவள்-பூமகள் கோமான்-நாயகனது அரங்கம்-திருவரங்கத்திலே,பயிலகை-ஸகலவாசஞ்செய்தல்,நன்றே-மிக்கதே-எ-று. ௨௮

பையிலத்தி மூளை நரம் புதிரம் பரந்தகுரம்
பையிலத்தி யுள்வினை பாண்டமென்றும்றபுன்பாவையர்சோற்
பையிலத்தி செய்து நரகெய்து விருப்பப் பற்றுமின்றே
பையிலத்தி மேவித் துயில்க ரங்கர்பொற் பாதத்தையே.

இ-ள், பயில் ஒன்றோடொன்று பொருந்தியிருக்கும், அத்தி-எலும்பு, மூளை-நரம்பு,ஊண்-தசை, உதிரம்-இரத்தம், பரந்த-பரவிய,குரம்பைசடலத்தை,இலத்தி மலம்,உள்-அகத்திலே, வினை-உண்டாகும், பாண்டம்-பாத்திரம்,என்றுமல்-என்றுநினையாமல்,புன்-இழிவுடைய, பாவையர்-பரத்தையரது, சொல்பையில். அத்திசெய்து- (இவ்வாறுபோகத்திலே) கொலைசெய்து,நரகுளப்தவிர- அதொக்கியுடையவினை- உய்ய-பிழைக்க பற்றுமிக்கு-குறியுங்கள்,பயில்-கம்பலை-பொருந்திய,அரசு-ஆதிசேஷயநிய

ள், மேவ்-சேர்ந்த, துயில்கூர்-அறிதுயில்-அமர்ந்த, அரங்கர்-பொன்பாத
ங்களையே-பொலிவுற்ற திருவடிகளையே-எ-று. ௨௪

பாதகங் கைக்கு மரக்கடல பேய்பண் டிராவணனுற்
பாதகங் கைக்குமென் றெள்ளக்கொய் தார்படிக் கேற்றதிருப்
பாதகங் கைக்குள விழுமுன்ன மேபங் கயன்விளக்கும்
பாதகங் கைக்குளிர் நீர்வீழ்ந் ததீசன் படர்சடைக்கே

இ-ள். பாதகம்-(அடியார்களது) பாவங்களை, கைக்கும்-அலைக்கும்-அர
ங்கர், பல்பேய-பல அலைகைகள், பண்டு-முன்னாளில், இராவணன்- இராவ
ணுசனது உறபாத-ஆச்சரியமான, கம்-சிரங்களை கைக்குமென்று- நசக்
கும்மென, எள்ள-நிந்திக்க, கொய்தார்-அணிந்தவர், படிக்கு- உலகுக்காக ஏ
ற்ற-இரந்த, திருப்பாத-(கொடுத்தவை) திருப்பக்கூடபாதகம் ஜலம், அதா
வது கங்காநீர் கைக்குள-அஸ்தத்திலே, விழுமுன்னமே வீழ்தற்குமுன்ன
மே பங்கயன்-அம்புயன், விளங்கும்-அலம்பும், பாதகங்கை திருவடிக்கங்
கை(எம்பெருமான் திருவடியின்), குளிர்-தடபமுள்ள, நீர் உதகமானது-ஈசன்-சங்க
ரனது படர்-பரவிய சடைக்கு-குடிலத்திலே, வீழ்ந்தது-விழுந்தது-எ-று.

படநா கந்தந்தார் மீதிருப் பாமெனம் பானரங்கன்
படநா கத்தந்தம் பறித்தோன் புகழைப் பாவுமின்க
படநா கந்தக் கணம்போல வனிசு பாலன்முற்பல
படநா கந்தந் தவகைக்குந் தான்றொல் பாகதியே.

இ-ள். படம்-ஸஹஸ்ர பணமுடிகளையுடைய நாகந்து-திருவனந்தா
ழ்வானில், அருமைத்து-வினையிசை, இருப்பான்-தங்குமவன், எம்பான்- எ
மக்குப் பரத்துவப் பொருளானவன், அரங்கன், நாகம்-வேழத்திலுடைய, தந்
தம்-கோட்டினை, பட-அதுவீயப பறித்தோன் கல்வினவன், புகழை அவனு
டைய கலையாணகுணங்களை, பாவுமின்-கொண்டாடுங்கள், கபடன்-வஞ்சக
ன், ஆகந்துயாக்கையுள், அந்தக்காணம் பொல்லான்-நான்கும் நிங்குற்ற
வன் ஆகிய சிசுபாலன், முன்-பண்டு பல்பட-பகுதியதமாக. கடசிகுவைவி
ருக்கத்து-பிதற்றிய, அந்தவசைக்கும்-அவ்விகழ்ச்சிச்சொற்களுக்கும்,
தொல்-பழமையுற்ற, பாகதி-சிரேஷ்டமானமோட்சத்தை, தந்தான்- ஈந்
தானெ-று. ௨௫

பாவைவி லன்னகன் பாற்சா லிலின்பா மென்னதிரு
பாவையின் மேகலை யிந்தா ளரங்கன் பணிந்திமையோர்
பாவையர் பாதிப் பின்னடிக் கிழு பவித்தழியும்
பாவையில் லொகுதேப் போற்பல கோடி கொண்டமே.

இ-ள். வாவு-அகன்ற, அயில்அன்ன- வேல்போன்ற, கண்விழிக்கொ டையுடைய, ஈருசாலி-திரௌபதை, நின்பரம்என்ன - என்னைக்காப்பது உன் பாரமென்று முறையிட, நிருபர்வேந்தர்கள்-அவையில்-சங்கத்திலே, மேக லை-துகிலைகளைய வளர்ந்துகொண்டே வந்த துகிலை, ஈந்தான்- அளித்தவ ன்-அரங்கன், அவனை இமையோர்-உம்பர்கள், பணிந்து-தாழ்ந்து, பாகவதரி ல்-ஸ்தோத்திரஞ்செய்துகொண்டேயிருக்கையில், ஆழி-சக்கரத்தினது ரேகையிருக்கும்பிரான்-ஸ்வாமியினது, அடிக்கீழ்-பாதங்களின்-கீழ், பா வையில்-தெண்டிசையினு நிக்கும், மோக்குமேப்போல்புத்புதவென்ன, ப லகோடி-அநந்தங்கோடி, பகிரண்டம், உற்பவித்துதோன்றி. அழியும்-மா ய்ந்துபோம்-எ-று. ௫௨

அண்ட படங்கலையுந்தந்து காத்தவையந்தந்தன்பால்
அண்டமடங்கலைச்செய்காரணமம்பொன்முத்தலைவான்
அண்டமடங்கலையிர்த்தோடும்பொன்னியரங்கன்புட்கார்
அண்டமடங்கலைமுந்நீர்மாருகப்பாகவென்றே.

இ-ள். அமருந்நாமானை, பொன்-சொன்னமும், முத்து தரளமும் கொழி க்கும அலை திரைகள், வான் அண்ட மேகமண்டலத்தை அளவிட, மடங்க லை-கண்டாவங்களை சாத்தோடும்-இழுத்துக்கொண்டோடிவரா நின்ற, பொ ன்னி - காவிரிசூழ்ந்த அரங்கன், அண்டம அடங்கலையும அகிலாண்டங்க ளையும-தந்து-சிருஷ்டித்து காத்து-அளித்து, அவைமீண்டும அவையனை வும், அந்தம-கடையில், தன்பால்-தன்னிடத்து, அண்டி ஒடுங்கும, அம் டங்களை-அந்தஊழிகாலத்தை செய-உண்டாகும, காரணம்-ஏதுவாதன னிடம்புறவையாகிய, காரண்டம்-நீர்க்காக்கைமடங்கு முடங்கியதை கதுகொண்டேயிருக்கும(அன்றிக்கே)அடங்கு அடங்கியிருக்கிற அலைமு ந்நீர் தரங்கவாரிதியு திசைகள் திருமகள், உகப்பாகவென்றே-களிப்பெய் த்தான், எ-று. ௫௩

ஆகமதிக்குமுகமேனமுகமுடையாளயன்வாழ்
ஆகமதிக்குநவதீக்கள்வவ்வளிகொள்வார்
ஆகமதிகளைஞ்சேசாங்காவுனையன்றித்திகயவம்
ஆகமதிக்குமிளணிணைடியேன்பிறாளாயுமே.

இ-ள். ஆகம-ஆகமவுதிகளுக்கிறவனை, திக்குமுகம்-நான்குமுகங்க ளுக்கு, மேல்மேலும், முகமுடையான்-ஒருமுகமுடையபிரனும் அயனபி ரமனும்-வாழ்-உறையும, ஆகமேனியாய, மதிக்கும், ஈசர்ககோா அவனி புமிணை, கொள (தடிக்கோட்டில்) கொண்ட, வாராக-கேழலாய்த்தவனே மதிக்குளம்-சந்திரபுஷ்கரணி, சேர்ந்த உ அரங்கநகருடையாய், உன்னை

புன்றி- வினைப்பலா து- அப- போகமபிறர் ஆறையும,வேறோருவனையும
தெய்வமாச் சேவ்வன,மதித்துள்-மனத்தில்,என்னேன்-கருமேதன். ()

ஆரக்தாக்தரநேர்நாய்த்தக்கையானக்தமாவரிகழ்
ஆரக்ககத்தன்றிமைக்கண்டாலங்கவுத்துவபூண்
ஆரக்கமாகமபளுவரிபாங்கதிகிரி
ஆரக்கைகதமாமதலாபென்றீராகுனக்கத்தன்மைத்தே.

இ-ள். ஆர-தண்ணேருசெய்ய,தணமதரும,முலைகொடுக்கும்-தாய்-அன்னை
யும,தந்தையும,அத்தமஅந்ததம,கதநக்சனன்-புதல்வன,அத்மை-தம்
மைஉணர்த்தொசல் இவைமுதலியதிருநக்கண்டால்கனைஆறில்,அனை
க்கமாகப்-பூர்ப்புகமகொள்வர்,இகழா,அக்குற்றங்களுக்காகச்சற்றும் நிந்
திக்கிலாகா,அம-கந்தாமான,கவுத்துவபூணாத்து-கௌஸ்துவாபாண
மேயைப்பா அர்கசயகு-சேவாகி,அணை-எழில்பெற்ற-அரங்கா,திகிரி-நே
மி,ஆம்பரருக்கிய,அதத-காத்தோய்,நற்தன்மதலாம-நந்தனந்தனமேன எ
ன்றிவந-என தயிரைகளும,உனக்கு அத்தன்மைத்து- அங்கனந்தான்-எ

அந்தஇவன்புனவன்னைப்பெருமனத்தமதாம்
அந்தஇவன்புலகுதவிளுண்டருளப்புயைவி
அந்தஇவண்டபபதேறாங்கனனசாங்கவைபிர்
அந்தஇவனபுகல்பெரிருவீர்க்குமடியரினன்றே

இ-ள்- அந்தனும-தந்தையும-அன்புள-ஆசையுடைய,அனனையும தாயு
மிராவும்கனும அநதமதாம- அவதியற்றதாகிய,அந்தவ அவ்வவவுட
லைனிஆம,மன்மெராருந்திய-பலலன்-கயவன் ஆதனில்-(யான்) ஆகையால்,
அமபுளை-தளிர்,விசக்குபுஜபலபராக்கிரமமுடைய,அனுமன்- சிறியதி
ருவடியின் புயமீது-தோண்மேல்,எறு-எழுந்தருளும அரங்கன் அம சந்
தமான்,சார்ங்கிமன்னும,வயிரம-சேதித்,தனு-கோதண்டம்த துக்கு,
மன்-இறைவன்-என்று புகல்-பகாப்பிம-பெருவிர்க்கும- பெருமையு
ற்றஉடம,இருவர்களும அடியமினன் று ஆண்டருள்-கின்னைகாத்தருள்-எ

அடியவராகவுமட்கொள்ளவுமெண்ணியாருயிர்கட்கும
அடியவராகமபடைத்தமையாலகமேபெறிய
அடியவராகவரங்கருக்காட்செயருட்கைதயால்
அடியவராகஞ்செய்மாறக்காட்செயுமையவரையே.

(இ-ள்.) அடியவர் ஆகவும்-தொழும்பர்களாகவும், ஆட்கொள்ளவும்(அங்ஙனமாயவரை) அடிமைகொள்ளவும், எண்ணி உன்னி, ஆர்-நிறைந்த, உயிர்கட்கு-சேதனங்களுக்கு, அடி அவர்-ஆதிகாரணமாயினர் அவர், ஆகம் இடைத்தமையால்-மனிதசரீரத்தைக் கொண்டதினாலே, அருமே நெஞ்சே, பெரிய, அடிப-கால்களையுடைய, வராகம்-எமையாயவதரித்த, அரங்கருக்கு, ஆட்செய்-தொண்டுபூண-பூண்டு அருள் அவாது அனிலென்னும் கதையால்-தண்டாயுதத்தினால், அவம்-பயனற்ற, ராகம்-காமத்தழலை, செய்மூட்டுகிற, மாரனுக்கு-அநங்கனுக்கு, ஆட்செயும்-பணிவிடையன்னும், இவரை-பஞ்சேந்திரியங்களையும், அடி-மோது-எ-று. ௩௪

வரையாழிவண்ண ரரங்கேசரீசன்முன் வாணன்றிண்டோள்
வரையாழியார்புள்ளின் வாகனத்தேவந்த நாட்டொடிற்றை
வரையாழிதுயராய்ந்தூசுநாணு மதியுஞ்செங்கை
வரையாழியும்வளை யுமிழந்தாளென் மடமகளே

இ-ள். வரை-கண்டவர்மனத்தைகவர்ந்துகொள்ளும், ஆழி-கருங்கடலன்ன, வண்ணர்-திருமேனியையுடையவர், அரங்கேசர், ஈசன்முன்-நக்கபிரான்முன்னர், வாணன்-வாணாசுரனுடைய, திண்-விறலுற்ற, தோள்-வாகுகளை, வரை-அறுத்தொழிக்கும், ஆழியார்-நேமியையுடையவர், புள்ளின் வாகனத்தே-கருடவாகனத்தேறி, வந்த-பவனிவராத்திவசத்தொட்டு-நாள்தொடங்கி, இற்றைவரை-இதுகாறும், ஆழிய துயராய்-ஆழ்ந்தமனவியாகுலமெய்தி, தூசும்-துகிலும் நாணும்-சமழ்ப்பும், மதியு-அறிவும், செங்கை-செய்யகரத்து, வரை-ரேகைகளையுடைய, ஆழியும்-மோதிரமும், வளையும்-சூடகமும், இழந்தாள்-அற்றனள், என, மடமகள்-முத்தை, நாரணபெண்-எ-று. ௩௮

மகரந்தகாதலைவாழ்வென்னவாரிசுட்டாய்திதிதன்
மகரந்தகாதலைவானிலுள்ளோர்க்குமண்ணோர்க்குவட்டா
மகரந்தகாதலைவார்குழையாய்வளர் சிரங்கதா
மகரந்நாதலைவாக்கிற்சொல்லேன்மடவாசெகிரே

இ-ள். மகரம்-சுறாக்கள், அலைவாழ்வு-கடல்வாழ்க்கை, தகாதென்ன-இனிக்கூடாதென்பதற்காக, வாரி-மகராலயத்தை, சுட்டாய்-தகித்தவதனைத்திதிதன்மகர்-திதிசுதர்களுக்கு, அந்தகா-காலனே, தலை-முதன்மைபெற, வானிலுள்ளோர்க்கு-வானவர்க்கும், மண்ணோர்க்கு-மானவர்க்கும், உவட்டா மகரந்த-தெவிட்டாத்தேனே, காது-கன்னத்திலே, அலை-திவளா

நின்ற,வர்-கொடிய,குரூரமாம் குண்டலங்களைத்தரித்தவனை,வளர்-திரு முதலியவளங்கள் தழைக்கும்,சீரங்கம்-திருவரங்கமென்னும்,தாம-திவ்ய வேதத்தைத் தன்மையுடையவனே.கார்த-நினமேலகாவுந்திருக்கும்,காதலை-நேசத்தை,மடவாளதிமே,நான்கு பெண்கள்முன்னர்,வாக்கில்வாக்கினு லி,சொல்லேன்-எ-அ. [illegible]

வாரகவமனமேயரங்காவட்டநேமியவ
வாரகவாவுன்வடிவுகண்டானமன்மதனுமட
வாரகவைதாஞ்செய்வமினன்று னுய்யும்வண்ணமெங்கே
வாரகவாசமூலைப்பெண்போலுள்ள மாதருக்கே.

இ-ள். வாரக-கேழலெனச்சூழல்கொண்டவனே,வாமனனே-மாணிக் குறளுருவா,அரங்கா,வட்ட நேமி-சக்கரா-காமமான திருவாழியாழ்வானை கைவா-வைத்தகத்துடையாய,ராகவா-சூரியவம்சத்துதித்தோய,உன்-நின வடிவு-சுந்தரமூர்த்தியை,கண்டால்-கண்ணுற்றால்,மன்மதனும- காம னும்,மடவார்ஆக-மாதராய்ப்பிறக்க,ஆதாஞ்செய்வனென்றால் - காமுறு வனெனில்.ஆகம-மார்பிலே,வார கச்சு,வாசம-மணமுமபொருந்தியமு லைபெண்போலுள்ள-பயோதாங்களையுடையளன்னைப்போலுற்ற மாத ருக்கு-பெண்களுக்கு,உய்யும்-பிராணனுற்றிருக்கும்வண்ணம-விதம்,எ ங்கே-யாங்கனம-எ-று. [illegible]

மாதம்பத்தாக்கொங்கை யும்மல்குற் றேருமவயிறுமில்லை
மாதம்பத்தாக்குறி யுங்கண்டிலேம்வந்து தோன்றினளூ
மாதம்பத்துக்கெதிர்மாபாவரங்கத்துவாழ்பாந்தா
மாதம்பத்துக்கருத்தில்லாப்பிறப்பென்பாவையகத்தே.

இ-ள். மாமகத்தான-தம்பத்தில்-தூணிலே,கொங்கையும- குயங்களு ம,அல்குல்-சுகனப்பிரதேசமாகிய,தேரும்-தேர்த்தட்டும.வயிறும-குக்ஷி யமில்லை,பத்துமாதம-சரைந்து திங்கள்வரைக்கும,குறியும-காணப்படுகி றகுறிகளையும்,கண்டிலேம்-காண்கிலேம,வந்துதோன்றின- உதித்தனி ளங்கிருபபூமாது-கமலைப்பிராட்டியார் அம்பத்துக்கு- விலோசனங்களு க்குளதிர-பிரத்தியட்சமாய்விளங்கும்,மார்பா-வட்சஸ்தலமுடையாய்அ ரங்கத்து,வாழ்-உறையும,பாந்தாமா பரந்தாமனே,தம்-தமக்குரியபத்தி க்கருத்து-பாத்திரமாகியவிளை,இல்லா-அற்றவா,பிறப்பென்பா- நம அறி யுஞ்சென்மமுடையரென்பா,வையகத்தே-பூமியிலே-எ-று. [illegible]

வைகுந்தா,தாமரைபோற்பாதாரகத்தமாதா பு
வைகுந்தமேறக்கொண்டருந்தீரவைத்தின்வாழ்மிடம

வைகுந்தம்பாற்கடல்மாநீரயோத்திவண்பூந்துவரை
வைகுந்தமன்பர்மனஞ்சீரரங்கம்வடமலையே.

இ-ள். வை-கூரிய-குந்தம்-குந்தாயுதத்தையுடையவர் — தாமரைபோல-அம்புயம்அன்ன,பாதார்சாணுடையவர்,மார்தர்-கோவியாது,படலை-துழாய்மாலை,தாங்கத்து-புன்னைவிருட்சத்திலும், குந்தமேல்-குருந்தமரத்துமேலும்,கொண்டு,கவர்ந்து இருந்தோர்-ஒளித்திருந்தவர்,வடிவைந்தில்-பஞ்சாயுதத்தோடும,வாழும்-உறையும,இடம்-தலங்கள்,வைகுந்தம்-திருமாமணிமண்டபம்பாற்கடல்-க்ஷீராப்பதி — மாநீர்-கங்காநீர்(சூழ்தரும்)அயோத்தி திருஅயோத்திமாநகரம்,வண் யாணர்பொருந்தியபூந்துவரை-பொலிவுற்றதுவாரகாபுரி வைகும-நடக்கா நின்ற,தம-தமது அடியார்-மனம்-இதயகமலம்,சீர்சிறப்புற்ற,அரங்கம.வடமலை-திருவேங்கடம்-எ-று

வடமலைதென்மலைகச்சிகுறுங்குடிமாநிற்பது
வடமலைவேலையரங்கங்குடந்தைவளருமிடம்
வடமலைகொங்கைத்திருவோடிருப்புவைகுந்தங்கா
வடமலையன்பருளநடையாட்டமறையந்தமே.

இ-ள். மால்-திருமால்,நிற்பது-நின்றகோலமாயிருப்பது,வடமலைசேஷாசலம,தென்மலை-ரிஷபகிரி,கச்சி-திருக்காஞ்சி,குறுங்குடி,வளருமிடம்-கிடந்தகோலமாயிருப்பது,வடம-ஆலிலை,அலை-திரைகள்பொருந்தியவேலை-அயோத்தி,அரங்கம-குடந்தை,வடம்-தாழ்வடங்கள்,அலை திவளுகின்ற்கொங்கை,வடம்-தாளவடங்களை,மலை- அணியும,கொங்கைஸ்தனங்களையுடைய,திருவோடு-பிராட்டியாருடன்,இருப்ப-தங்கும் கோலமாயிருப்பது,வைகுந்தம-திருமாநகரம நடை-சென்றகோலமாயிருப்பது, கவடம்-வஞ்சகமுதலியவற்றை,அலை-கைக்கும்,அன்பர்,நேசர்களுடைய உள்ளம-மனம்,ஆட்டம-நடிக்குமகோலமாயிருப்பது,மறைஅந்தம- வேதத்தின்முடிவில்-எ-று. கஉ

அந்தகாசலம்வந்தாஇனியறையாதிருப்பார்
அந்தகாசலங்காபுரியார்க்காங்காமனாயின்
அந்தகாசவக்கூக்குரலோயுமுன்னேழ்கடங்கல்
அந்தகாசலத்தேதஞ்சமேவிவருகக்கண்டே

இ-ள். ாசலங்காபுரியார்க்கு இராஜரீகம்பொருந்தியஇலங்கைவாழாக்கருக்கு- அந்தக்காலனே, அரக்கா-மறையின்ஆணத்தின்-அந்த-அந்தாக்

தில்கடிப்பவனே-சராசலம் திரிக்கையுடையவரைப்போன்றவாரணத்தின்-கூக்குரல்-விளிக்குரலோசை ஒழிமுன்னமே- ஆழ்-அகாதமான, தடம்வாவியுள, கலந்த-சேர்ந்த, காரா-மகரமானது, ஜலத்தே-நீரிலே-துஞ்சமீட, நேமி-சின திகிரி, அறுக்க-தடிந்திட்டுக்கண்டபோதும், ஆசு-தீங்கு, அலம-சஞ்சலம், இவைமுதலியவை, வந்தால்-நேர்ந்தகாலத்து-உன்னை நினைஅழையாது-ஆபத்பாந்தவாஎனவிளிக்காது-இருப்பார்; அந்தத்துன்பங்களிலேஇருப்பவர், அந்தகர்-குருடர், ஞானக்கண்ணற்றவர்-எ-று. ௩௭

அறுகுதலைப்பெய்பனிபோன்றதாதுருவாய்ப்பிறந்தல
அறுகுதலைப்பிள்ளையாய்க்காளையாய்க்கிழமாகியையள
அறுகுதலைச்செய்துவீழ்காயநானென்னுமாரிருளை
அறுகுதலைக்கொள்பணியரங்காநின்கணாசைதந்தே.

இ-ள். அறுகுதலை-அறுகம்புல்லினுனிட்த்தில், பெய்வீழும் பனிபோன்ற-பனிபோலும்சிறிய, தாது-இந்திரியம் உருவாய் ரூபங்கொண்டு, பிறந்து-செனித்து அலறு-அழுகிற குதலைப்பிள்ளையாய் மழலைச்சொற்களையுடையமகவாய், காளையாய்-யௌவனமடைந்துகிழமாகி-மூப்படைந்து ஐ-சிலேஷ்மமாகியஅளறு, சேறு-உகுதலைச்செய்துசிந்தி, வீழ்-மரிக்கும காயம-சடலத்தை, நானென்னும்-நான் என்றுசொல்லுமகங்காரமாகிய ஆர்-நிறைந்த, இருளை-அந்தகாரத்தை, அறு-நீக்கு, கு-தாரதலத்தை, தலை-முடியில், கொள்-சுமக்கும், பணி-திருவனந்தாழ்வானிடத்து, துயில்கூரும, அரங்கா-நின்கண் உன்னிடத்தில், ஆசை-அன்பு, தந்து-அளித்து-எ-று.

ஆசுகவிக்குநிகரெனக்கில்லையென்றற்பனைப்பூ
ஆசுகவிக்குவில்வேள்வடிவாவறிவாலகத்திம்
ஆசுகவிக்குவலயமன்னுவென்றாற்றியிரந்து
ஆசுகவிக்கும்புலவீர்புகழ்மினரங்கனையே.

இ-ள். ஆசுகவி-விரை-விலகவிபாடுவதில், எனக்குநிகர்- இல்லையென்று என்னைப்போன்றவரில்லையென, அற்பனை-பற்றையைபூஆசுகம- புஷ்பபாணத்தையும்-இக்குவில்-கருப்புவில்லையுமுடைய வேள்வடிவா- மன்மதசொரூபனே, அறிவால்-கல்வியில், அகத்தியர்-குறுமுனியே, சுக-சுக- சுகரிஷியே, இக்குவலயமன்னு-இம்மண்டலேச்சுரனே என்று-ஆற்றி, எனப்பிதற்றி, இரந்து-ஏற்று, ஆசு-ஏதங்கள், கவிக்கும - மொய்த்திருக்கும், புலவீர்-நாவலர்காள், அரங்கனையே, புகழ்மின்-பாவுங்கள்-எ-று. ௩௮

கனகவி மானமற் றீனர்க் குரைக்கிலென் கால்பெற்றவா
கனக்கவி மானமற் கருடப்புள் ளூர்தியைக் கான்மலர்கோ
கனகவி மானம் புவிமான் நடவரக் கண்வளருங்
கனகவி மானத் தரங்கனை நாச்சொல்லக் கற்றபின்னே.

இ-ள். கால்-வாயுபகவான்—பெற்ற-ஈன்ற—வாகனம்-ஊர்தியாகிய—கவி-சிறியதிருவடியையும்—மால்-பெருமைபொருந்திய—நல்-அழகுள்ள—கருடப்புள்-பெரியதிருவடியையும்—ஊர்தியை-கடாவுமவனை—கான்மலர்-பாதபத்மங்களை—கோகனகம்-வாரியமலருகித்த—இம்மான்-இந்தஸ்ரீதேவியும்—அம்புவிமான் (அந்த) பூமிப்பிராட்டியும்—நடவர-தைவர—வருட கண்வளரும்-துயில்கூரும்—கனகவிமானத்து-சொன்னவிமானத்தையுடைய அரங்கனை—நா-ஜிகுவையினால்—சொல்ல-ஸ்தோத்தியஞ்செய்ய—கற்றபின்-பயின்றபின்னர்—கனம்-பெருமைபொருந்திய—கவி-கவித்துவங்களை—மானம்-கவுரவம்—அற்று-ஒழிந்து—ஈனர்க்கு-புல்லர்க்கு—உரைக்கிலென்-சாற்றிலேன்-எ-று. ()

கற்றின மாயவை காளையர் வான்கண்டு மீணினைவ
கற்றின மாயமு நீகன்று காளைய ராகிப்பல்ப
கற்றின மாயர் பரிவுறச் சேரி கலந்தமையுங்
கற்றின மாயவொண் ணுவரங் காசெங் கமலற்குமே.

இ-ள். கற்றினமாயவை-பசுக்குலங்களும்—காளையர்-பிள்ளைகளும்—வான்-விண்ணுலகை—கண்டு-தரிசித்து—மீள்-திரும்பிய—நினைவு-ஞாபகத்தை—அகற்றின-விலக்கிய—மாயமும்-ஆச்சரியமும்—நீ, கன்று (அந்தப்பிரமன் கவர்ந்துகொண்டுபோன கன்றுகளும்—காளையர்-சிறுர்களும்—(போல) ஆகி-உருவெடுத்து—பல்பகல்தினம் - வெகுநாள்வரைக்கும்—ஆயர்-பொதுவர்—பரிவுஉற (தங்கள் தங்கள் கன்றுகள்பிள்ளைகளென்று வேற்றுமையின்றி) அன்புஉற்றிருக்கும்படிக்கு—சேரி-திருவாய்ப்பாடியுள்—கலந்தமையும்-சேர்ந்து இருக்கமாயமும்—அரங்கா, செங்கமலற்கும் - செய்யதாமரையில்வந்தவனுக்கும்—கற்று-பயின்று—இன்னம்—ஆயவொண்ணு-ஆராயக்கூடாது—எ-று ௯௮

கமலக் குவளை மடவார் தனக்கண்க ளென்றுரைத்த
கமலக் குவளை முதுசா தியுக்கனா வீழ்புனற்கா
கமலக் குவளை விளையா டரங்கன்வின் காற்றுக்கனல்
கமலக் குவளையுண் டான்றொண்ட ராய்ப்பின் காமமற்றே.

இ-ள். மடவார்-வனிதையருடைய— தனம் - குயங்களை— சயிலம்- நாக ஞாமெட்டு—கண்கள் - நாட்டங்களை, குவளை-நீலோற்பலம்—என்று உரைத்தனை (உவமானங்களாகக் கற்பித்து) சொல்லி—அகம்-மனமானது—மலங்கு-கலங்குதலாய்—வளரும் அரு ஆகியும்-கூல்விந்தும்—கலாவீர்மைவிகாரம்—காமம் ஆற்று (அந்த) மோகத்தைஒழித்துவிட்டு—புனல்நரகம்-காரண்டமும்—மலங்கு - நாண்றையும்—வனை-பணிலங்களும்—விளையாடும், அரங்கன்-அரங்கநாதன்—விண்-ஆகாயம்—கார்-வாயு—கனல்-தேயு—கம்பலம்-அப்பு—கு-பிருதிவி— ஆகிய பஞ்சபூதங்களொடு, அனை-தனையும்—உண்டான்-அமுது செய்தவனுக்கு—தொண்டராய்-தாசர்களாகி—உய்ம்மின்-உஜ்ஜீவியுங்கள்—எ-று. ௬௯

காமனைத் தாள்விழவூதியக் காவைக் கவரரங்கன்
காமனைத் தாமென்று நைவார்க் கமுதன்கன் னெஞ்சர்க்கிரங்
காமனத் தானளக் குங்கடற் பார்கலம் போன்றதுநீ
காமனைத் தாமரை யோன்கங்கை பாயமரங் கான்மலரே.

இ-ள். கா-கற்பகத்தருவுக்கு—மன் - இறையாகிய இந்திரன்—நத்தால்-சங்கநாதத்தினால்—விழ மூர்ச்சையடைய—ஊதி-தொனித்து—அக்காவை-அந்தத்தருவை—கவர்-வவ்விய— அரங்கன் - காமன்—அத்தான் அ-மதனசனகனென—ஐவார்க்கு-மனிதருருகுமவர்க்கு—அமுதன் (நாவினிடத்து)தேவாமிர்தம்போலருசிகிப்பவன்—கல்நெஞ்சர்க்கு-வன்மனத்தார்க்கு—இரங்கா-கருணையளிக்கிலா—மனத்தான் (அவர்களைப் பார்க்கிலும்கடிய) சிந்தையுள்ளவன் (அவன்) அளக்கும்—கடல்பார்-ஆழிசூழுலகு—கலம்-வங்கத்தையும்—அத்தாமரையோன்-அந்தப்பங்கயன்—மிகாமன்-மாலுமியையும்—கங்கைசாகவிநதி,பாய்-பாயையும்—கான்மலர் (அவனுடைய) பாதபங்கேருகம்—மரம்-பாய்மரத்தையும்—போன்றது-ஒத்தது—எ-று. ௭௰

மலருந்தி மேல்விழ மெய்நெரித் தான்வையமேழுந்துஞ்சா
மலருந்தி னனரங் கன்குற ளாய்மண் ணளந்தவந்நாண்
மலருந்தி வர்க்கதிர் வண்குடை யாய்முடி மாமணியாய்
மலருந்தி யாய்த்திருத் தாள்விரலாழி மணியொத்ததே.

இ-ள். மலர்-மல்லர்கள்—உந்தி- தாண்டிவந்து—மேல்விழ-தன்மீது வீழவும்—மெய் (அவர்கள்) உடலை, நெரித்தான்-குமைத்தவன்—வையமேழும-சத்தபுவனங்களையும்— துஞ்சாமல்- நாசமுறாது—அருந்தினன்-விழுங்கினவன்— அரங்கன், குறளாய்-வாமனனாய்—மண்-உலகினை—அனந்தஅந்நாள் - அளந்துகொண்டபோது—மலரும்-தோன்று

ம—திவாக்கிர் - தினகரன்—வண்குடையாய் (முதல்) அழகிய கவிகையாய்—முடி (உடனே) சிகையில்தரித்த—மா-மகத்தான—மணியா ய்-ரத்தினமாய்—மலர்உந்தியாய் (பிறகு) பங்கஜநாபியாய்—திருத்தாள் (ஆறாம்) திருவடியில்—விரல்-விரலில் அணியும்—ஆழி-அறுகாழி மோதிரத்தின்—மணி-மாணிக்கத்தை—ஒத்தது-நிகர்த்தது—எ-று.()

மணிவா சற்றூங்க வொருகுடைக் கீழ்வையங் காத்தச்சிந்தா
மணிவா சவனென வாழ்ந்திருப் போர்பின்னை மாதிருக்கு
மணிவா சமாரப்பரங் காகேசவாவென்று வாழ்த்தித்திரு
மணிவா சகங்கொண் டணிவாரடியை வணங்கினரே.

இ-ள். வாசல்-தலைவாசலில், புறக்கடையில், மணி ஆராய்ச்சிமணி, தூங்க-தொங்கவும், ஒரு-அதுல்மான, குடைக்கீழ் - பூர்சக்கரக்குடை நீழலில், வையம்-மேதினிமுழுதும், காத்து-தாங்கி, சிந்தாமணி (வேண்டிற்றெல்லாமளிக்கும்) சிந்தாமணியையுடைய, வாசவனென்ன-தேவேந்திரன்போல்; வாழ்ந்து (சகல) வைபவமும் அநுபவித்து; இருப்போர்-வீற்றிருப்பவர் (யாவரெனில்) பின்னைமாது-திருமங்கை, இருக்கும்-தங்கும், மணி-சுந்தரமுள்ள, வாசம் (துல்லை) மணங்கமழும், மார்பு-அகலமுடைய, அரங்கா-கேசவா, என்றுவாழ்த்தி - ஸ்தோத்திரித்து, திருமண்-திருமண்ணை, இவ்வாசகம் - இந்தத்திருநாமமந்திரத்தை சொல்லி, பாராயணஞ்செய்து, அணிவார்-தரிப்பவரது, அடியை - பாதங்களை வணங்கினரே-தாழ்ந்தவரே—எ-று. ௫௨

வணங்கரி யானரங் கன்னடி யார்தொழ வாளரவு
வணங்கரி யாடற் பரிதேர் நடத்தெந்தை வானவர்க்கும்
வணங்கரி யானன்றிக் காப்பாரில்லாமையின் மண்ணறியும்
வணங்கரி யானவர் வாணன்கண்டாகனன் மார்க்கண்டனே.

இ-ள் வண்ணம்-மேனி, கரியான் - அஞ்சனமன்னவன், அரங்கன், ஆரவு-அடியார்-தொண்டர்கள், தொழ-சேவிக்க, வாள்-ஒளிபிலாவிய, அரவு-சர்ப்பம், உவணம்-கருடன், கரி-யானை, ஆடல்-நடனமாடுகிற, பரி-குதிரை, தேர்-ரதம், (இவைமுதலியவாகனங்களை) நடத்து-பவனிநடத்தும், எந்தை-எம்தந்தை, வானவர்க்கும் - சுரர்களுக்கும்—வணங்குதற்கு அரியான்-வணங்குதற்கு அசக்கியன், அன்றி (அவனை) அல்லாது, காப்பார்-இரட்சிப்பவர், இல்லாமை - இல்லாதிருக்கும் தன்மையை, விண்-தேவரும், மண்-மனிதரும், அறியும்வண்ணம் ஒருபடிக்கு, கரியானவர்-சாட்சியானவர்; வாணன்-கண்டாகன்ன்-மார்க்கண்டன்-ஆ து

கண்டலங் காரள கங்கெண்டைமேகங் கவிரிதல்சொல் }
கண்டலங் கார முலையிள நீரென்று கன்னியர்சீர்
கண்டலங் கார மருளேன் புனற்கயல் கொக்கென்றஞ்சக்
கண்டலங் கார மலரரங் கேசர்க்குக் காதலனே.

இ-ள். புன-நீரிலுற்ற, கயல்-கெண்டைமீன்கள், கொக்குஎன்று-குரண்டமென்று, அஞ்ச-பயப்பட, கண்டல்-கைதை, அங்கு (அந்தப்புனலின்பக்கங்களில்) ஆர-மிகுதியும், மலர்-விகசிக்கும், அரங்கேசர்க்கு-அரங்கநாதருக்கு, காதலன்-நேசனாயினேன், (ஆகையால்) கன்னியர்-மங்கையரது, கண்தலம்-விழிகளை, கெண்டை-சேல், கார்-இருள்மூத்த கரிய அளகம்-குழலை, மேகம்-மங்குல், இதல்-அதரத்தை, கவிர்-கிஞ்சுகம், சொல்-குதலைமொழிகளை, கண்டு-கன்னல், அலங்கு-திவளாகின்ற, ஆரம்-மாலைகளைச்சுமந்த, முலை-கொங்கைகளை, இளநீர்-என்று-என, (உவமானசங்கிரகவிதிப்படியே) கூறி-சீர (அவர்களுடைய) சிறப்புற்ற அலங்காரம்-சிங்காரத்தை, ரூபலாவண்ணியத்தை கண்டு-பார்த்து, மருளேன்-மதிமயங்கேன்—எ-று. ௭௪

காதலை வாரிமண் வெண்கோட்டில்வைத்துண்டு காட்டியரங்
காதலைவாகழற் குள்ளாக்கினாய்கரப் பெங்கெனவே
காதலை வார்குழை வைதேகியைநின் கருத்துருக்குங்
காதலை வானரர்த் தேடவிட்டாயிது கைதவமே.

இ-ள். அரங்கா-துலைவா-காவலனே, காது-மோதுகின்ற, அலைவாரி-தரங்கக்கடலுடுத்த, மண்-பார்மடந்தையை, வெண்கோட்டில் (கோலமாய்) வெள்ளியகொம்பில், வைத்து-இருத்தி, உண்டு-அருந்தி, காட்டி-உமிழ்ந்து, கழற்குஉள் (திரிவிக்கிரமமாய்) ஓரடிக்குள், ஆக்கினாய்-ஒடுங்கப்பணித்தாய், காது-கன்னத்தில் - அலைமோதும், வார்-நெடிய, குழை-குண்டலங்களைத்தரித்த, வைதேகியை-சீதாபிராட்டியை, நின்-உனது, கருத்துஉருக்கும்-நெஞ்சைவாட்டும், காதலை-ஆசைக்கனியை, பிராணநாயகியை, கரப்பு (கண்டகன்) ஒளித்துவைத்தஇடம், எங்குஎனவே-யாங்கணமென்று, வானரர்-கவிகள், தேட-கண்டுபிடிக்க, விட்டாய்-அனுப்பினை, இதுகைதவமே-இதுஎன்னமாயமோ—எ-று. ௭௫

தவரா கவைக்கணை யொன்றாற் கடற்றெய்வந் தானென்றிருந்
தவரா கந்தீர்த்துக் கெழுக்கண்ட நீதர்ப்பை மேற்கிடந்து
தவரா சப்பாவிந் தென்றேதொழுதாய் தண்ணரங்கத்துமா
தவரா கவாகஞ் ஞனேயென் றேனுவதாரத்தனே.

இ-ள். தண்-சீதளமான, அரங்கத்து-திருவரங்கநகருடைய, மாதவ- பின்னைமணாளனே, ராகவா-கண்ணனே-கிருஷ்ணாவதாரனே எண்ணொ ணா-அலகுஇடக்கூடாத, அவதாரத்தனே - சூழல்களுடையாய், தவர்- கோதண்டத்திலேபூட்டிய, ஆதவக்கணை-பகைகளாத்துக்குரியவாளி, ஒன் றால்-ஒன்றினாலே, கடல்-தெய்வம்-மகாதேவன், வருணன் ௦ தானென் றஇருந்த, ஆரகம்-அகங்காரத்தை, தீர்த்து - ஒழித்து, தொழ(உன் னை) வணங்க-கண்ட-பணித்த, நீ-தர்ப்பைமேல், கிடந்து - சயனித்து, தவர்ஆக-யோகியென்ன, பாவித்து - எண்ணிக்கொண்டு, என்னே- யாதுகாரணத்தினாலோ, தொழுதாய்(அவனைமுன்பு)பணிந்தாய்-எ-று.

தாரா கணமண் ணளந்தவ னாளன்பர் சாத்துந்துழாய்த்
தாரா கணம்புயம் போலரங் காதல மேழுக்குமா
தாரா கணமங்கை யாயும்பர் தூவிய தண்மலர்வீழ்
தாரா கணமுநில் லாகாற் றிற்சூழ்வளந் தானொக்குமே.

இ-ள். அன்பர்-நேசர்கள், சாத்தும்-சூடும், துழாய்த்தாரா-வனமாலி கையாய், கண்-விலோசனங்கள், அம்புயம்போல்-பங்கயம்உறழும், அர ங்கா, தலமேழுக்கும்-சப்தலோகங்களுக்கும், ஆதாரா-ஆதாரமாயிருப் பவனே, கணமங்கையாய்-திருக்கண்ணமங்கையென்னும திருப்பதியுற் றவனே, மண் அளந்த-அந்நாள்நீ உலகளந்தபோது, தாரா-விண்மீனின ம், கணம்-தொகை (எங்ஙனம்விளங்கிற்றெனில்) உம்பர் - வானவர், தூவிய-சொரிந்த, தண்-சீதமுள்ள, மலர்-போதுகள், வீழ்தாரா(இம்ப ரும்) விழாது, கணமும்-ஒருக்ஷணமேனும், நில்லா (உம்பரும்) நிலையு ற்றிராது, காற்றில்-ஊதையில், சூழ்-சுழலும், வளம் - மாட்சிமையை, ஒக்கும்-நிகர்த்தது—எ-று. தான்-அசை. ௭௭

தானந்தி யாகந் தவங்கல்வி தீர்த்தந் தழலவி
தானந்த யாகந் தருமிழி பாவின தண்ணரங்கத்
தானந்தி யாகப் பகன்மறைத் தான்பெயர் தந்திடும்வே
தானந்தி யாகண் டலனறி யாப்பரந் தாமத்தையே.

இ-ள். தானம்-தானம்செய்தலும், தியாகம்-தியாகம்அளித்தலும், தவ ம்-விரதம்பூணுதலும், கல்வி-கலைகள்பயில்தலும், தீர்த்தம்-தூயநீராட ப்போதலும், தழலில்-அக்கினியில், அவி-அவிர்ப்பாகம், நந்து-சொரிய ப்பட்ட, யாகம்-மகங்களும், இழிபாவின-சிறுபதவிகளை, தரும்-அளிக் கும், தண்-ஈரமுள்ள, அரங்கத்தான், அந்திஆக - மாலைப்போதென்ன பகல்-பானுவை-மறைத்தான் (ஆழியால்) மூடினவன் (அவனுடை பெயர்-சகஸ்திரநாமங்களுள்ஒன்றே, வேதா-வாணிகேள்வனும்

நாரிபாகனும், ஆகண்டலன்-ராசியனனனும், அறியா-உணரக்கூடாத, பரந்தாமத்தை, தந்திடும்-அளிக்குமரம் — எ-று. தான்-அசை. ௭௬

தாமரை மாத்திரை மூப்பற் றவானவர் தண்ணறுஞ்செந்
தாமரை மாத்திரை வந்தா டலைவரைத் தண்ணரங்க
தாமரை மாதிரை போல்வளைந் தேற்றுத் தருப்பொருட்டால்
தாமரை மாத்திரைக் கேசங்கி னோசையிற் சாய்ந்தனரே.

இ-ள். தா-தத்தும, மரை-மண்டுகத்துக்குள்ள, மா-மிகுந்த, திரை-திரையும், மூப்பு-விருத்தமும், அற-ஒழிந்த, வானவர்-கடவுளர், தண்ணறும் செந்தாமரை-குளிர்ச்சியும் மணமுமுள்ள செய்யமுண்டகத்திருக்கும், மா-இலாவண்ணியமுள்ள, திரைவந்தாள்-ஸ்ரீராப்திதனயை, தலைவரை-நாயகரை, தண்-சீதளமான, அரங்கம்-திருவரங்கமென்னும், தாமரை-திவ்வியக்ஷேத்திரத்துறைவரை. திரைமாபோல - திரைச்சீலையென்ன, வளைந்து-சூழ்ந்துகொண்டு, ஏற்று-எதிர்த்து, தருப்பொருட்டால்-கற்பகவிருட்சத்துக்காக, தாம்-தாங்கள், அரைமாத்திரைக்கே-அரைக்ஷணத்திலே, சங்கினோசையில்-பாஞ்சசன்னியத்தின் தொனியினால்; சாய்ந்தனர்-மூர்ச்சையடைந்தார்கள் — எ-று. (தாமரை-தாவுகிற காளக்குதிரைபோன்ற என்றும், தா-கெடுதலும், மரை-மரணமும், என்றும பொருள்கூறுவாருமுளர். ௭௭

சாகைக் குந்தத் துகிறூக்கி மாதர் தமைநகைத்தாய்
சாகைக்குந் தத்துவங் கட்கெட் டாயதண் புனலரங்கே
சாகைக்குந் தத்துப் புடையாழி யேந்துமெங்கள்வெய்யோர்
சாகைக்குந் தத்து தவிர்கைக்கும் போலுமுன்சங்கற்பமே.

இ-ள். சாகை-கொம்பர் (தழைத்த) குந்தத்து-குருந்தமரத்திலே, துகில்-கலைகளை, தூக்கி-எடுத்துக்கொண்டுபோயிருந்து, மாதர்தமை-கோபியரை, நகைத்தாய் (உன்னைத்திக்காடைபுனைந்தேற்கும் கோலத்தைக் கண்ணுற்று) முறுவலித்தவனே, சாகைக்கும்-மறைக்கும், தத்துவங்கட்கும், எட்டாய்-அகோசரமாயிருப்பவனே, தண்-தண்ணிய, புனல் (காவேரி) ஆரு-(பாயும்) அரங்கேசா, கை-கையில், குந்த-இருக்க, திப்புடை-அடலார்ந்த, (அன்றிக்கே) குந்தத்து-குந்தாயுதத்தின், புடை-பக்கத்தில், ஆழி-சக்கரத்தை ஏந்தினவனே, எங்கள்-தரித்திருப்பது, வெய்யோர்-தீயோர், சாகைக்கும்-இறப்பதற்கும், தமர்கள்-அடியார்கள், தத்து-விபத்துகளை, தவிர்கைக்கும்-நீக்கவும், போலும்-ஒக்கும், உன்சங்கற்பம்-திருவுளக்கருத்து — எ-று. ௭௮

சங்கத் தமரர் குழாத்தொடு மூழ்வினை தான்விலக்கச்
சங்கத் தமரன்ப ராயிருப் பீர்கடல் தானவர்தே
சங்கத் தமரம் படவெய்த சார்ங்கத் தனுவரங்கன்
சங்கத் தமரன் சரணே சரணென்று தாழ்ந்திருமே.

இ-ள். கடல்-சப்தசாகரங்களும், தானவர்-அசுரர்களுடைய, தேசம்-ஊர்முழுமையும், கத்த-இரைச்சலிடவும், மரம்-சப்தமராமரங்கள், பட-நசிக்கவும், எய்த-வாளிதொட்ட, சார்ங்கம்-சார்ங்கமென்னும், தனு-கோதண்டத்தையுடைய, அரங்கன்-சங்கம்-பாஞ்சசன்னியத்தின், தமரன்-முழக்கத்தையுடையவன், (அன்றிக்கே) சங்கம்-நாவலர்களை, தமரன்-தாசராகவுடையவன், (அவனது) சரணே-திருவடிகளே, சரணென்று-தஞ்சமென, தாழ்ந்திரும்-காமுற்றிருக்கள், சங்கத்து (பரமபதத்தைப்பிரியாது) கூடியிருத்தலையுடைய, அமரர்குழாத்தொடும்-நித்தியசூரிஜன-சமூகத்துடனே, ஊழ்வினை-பூர்வசன்மம், விலக்க-அற, சங்கத்து (அவர்கள்) அவையில், அமர்-பொருந்தும், அன்பராய்-நேசராய், இருப்பீர்—எ-று. தான்-அசை. ௯௧

இருந்தே னுகமுட வன்வரை நோக்கி யிருப்பதுபோல்
இருந்தே னுகந்தனை வைகுந்த நோக்கி யெதிர்பொருங்கேள்
இருந்தே னுகனும் படவதைத் தாய்வெண்ணெ யாமத்தொளித்
திருந்தே னுகாரங் கரகா ணுநாளினி யென்றருளே.

இ-ள். எதிர்பொரும்-மலைந்துயுத்தம்புரியும், கேளிரும்-தமர்களும், தேனுகனும்-தேனுகாசுரனும், படவீய-வதைத்தாய்-சங்கரித்தவனே, யாமத்து-நடுச்சாமத்திலே, வெண்ணெய்-நவநீதத்தை, ஒளித்திருந்து (ஆயர்மனையில் பதுங்கிக்கொண்டு இருந்து), நுகர்-உண்ணும், அரங்கா, இரும்-பெருமையுற்ற, தேன், உக-சிந்த, முடவன், வரை-பர்வதத்தை, நோக்கி-பார்த்துக்கொண்டே, இருப்பதுபோல், உனைஉகந்து-நின்னை வியந்து, வைகுந்தம்நோக்கி - பரமபதத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தேன் (இதுவரைக்கும் இருந்தனன், காணும்நாள்-இனியென்று (உன்னை) தரிசிக்குங்காலம் இனி ; குறைகிற்று, என. அருள் (சேவைசாதித்து) அருள்—எ-று. ௯௨

அரும்பா கவதரிக் கும்பெய ராய்புள் ளரசிறுங்கோ
அரும்பா கவதாங் குப்பனை யாயரங்க வெனவுண்
அரும்பா கவதர் பத்திர்க்கத் தன்கொள்ளா கடிகள்கொப்புள்
அரும்பா கவதர்நெ ஞ்சிலார் கல்லார்க்கங் கையாகுந்தீதே

இ-ள். அரும்பாகு - (துதிப்பவர்நாவில்) நண்ணியதிரதம், அவதரிக்கும்-காக்கும், பெயராய் - நாமங்களையுடையவனே, புள்அரசிற்குக் - ககராசனான்பெரியதிருவடிக்கு, ஓரரும்பாக உணர்தற்கரியவனா, அதரம் இதழ், துப்பு அனைவாய் - துகிர் அன்னவனே, அரங்கா, என உணரும்-என்று (அவனை) தியானிக்கும், பாகவதர்-பரமபாகவதர்களுடைய; பத்திரத்தங்கொள்ளாது, ஸ்ரீபாததீர்த்தம்ஏற்காது, அடிகள் உள்ளங்கால், கொப்புகள் அரும்பு ஆக-கொப்புளிக்க, அதர்தொலைப்பார்-தூரவழிகள் (யாத்திரைசெய்து) முடிப்பார், கல்லார்-கயவர், கங்கைஆடுதற்கு-கங்காஸ்நானஞ் செய்யும்பொருட்டு-எ-று. ௮௭

ஆடுமுன் னீர்முதற் றீர்த்தத்தி னலரு மாதவத்தால்
ஆடுமுன் னீர்மறை வேள்வியி னலண்ட ராயுடன்மாறு
ஆடுமுன் னீரது மாயையி னலென் றரங்கனைக் கொண்டு
ஆடுமுன் னீர்செய்த பாவமும் போய்முத்த ராம்வண்ணமே.

இ-ள். ஆடும்-மூழ்கும், முந்நீர்முதல்-சமுத்திரமுதலாகிய, தீர்த்தத்தினால்-பரிசுத்தஜலங்களாலும், அரும்-அரிய, மாதவத்தால்-மகாதவங்களாலும், ஆடு-அசத்தை, முன், ஈர்-வெட்டும், மறை - வேதவிதியால் செய்யும், வேள்வியினால் - மகங்களினாலும், அண்டர்ஆய் (நாஜன்மம் போய்) வானவர் ஆக, உடல்-யாக்கையானது, மாறும் - வேற்றுமையுறும், அது - அப்படிப்பேசப்படுவது, மாயையினால்என்று (விஷ்ணு) மாயையாலென், உன்னீர் - நினைக்கிலீர் (அவ்வனம் வீணேயழலாது) முன்-ஜென்மாந்தரத்திலே, நீர் - நீங்கள், செய்த - இயற்றிய, பாவமும் போய் தீவினைகளும் அற்று, முத்தர்-முத்திக்குரியவர், ஆம்வண்ணம்-ஆகும்படிக்கு, அரங்கனை, கொண்டாடும்-பரவிமின்-எ-று. ௮௮

வண்ணங் கலிவஞ்சி வெண்பா வகவல் வகைதொடுத்தோர்
வண்ணங் கவிகெட வேண்டுமென் றேமக்கண் மாட்டுரையேன்
வண்ணக் கவிகடல் போல்வா னரங்கன் வகுளச்செல்வன்
வண்ணக் கவியன் புகழ்தர லெனக்கென்று மாநிதியே.

இ-ள். வண்ணம் - கலிவஞ்சி வெண்பா அகவல், வகை (இவைமுதலியபாவினத்துடன்-பாவினங்களினதும்) கூறுபாட்டினை, தொடுத்து-யாப்புறச்செய்து, ஓர்வண்ணம்-ஒருவிதமாக, கவிகெட-ஈஸ்வரவுநீங்க, வேண்டுமென்று, மக்கண்மாட்டுரையேன் - மானிடம்பாடகில்லேன், வண்ணம்-திருமேனி, கலிகடல்போல்வான்-குளாஆழியன்னவன், அரங்கன் (அவனது) வகுளச்செல்வன் மகிழலங்கற்சடகோபன், வண் - வளமை

சியன்-பாகாலன் (முதலியபன்னிருவர்) புகழ்-பாவும்; தாள்-திருவடிகளை-எனக்குஎன்றும், மாநிதி-இரும்தனமாம். (அரு)

மானா கவரு நிருதனபுன் மாயையின் மங்கையென்னு
மானா கவரு மணிமைமுன் னீங்கினன் மாயனென்பார்
மானா கவரும் பலர்சோலைசூழு மதிலரங்கா
மானா கவரு மதுவே யதுவுநின் மாயமன்றே.

இ-ள். மாயன் - ஆச்சரியபூதனான இராமன், மான் ஆக (பொன்) உழையென-வரும்-நிருதன் (மாரீசனென்னும்) அரக்கனது-புன்மாயையின்-புல்லியமாயைக்குட்பட்டு, மங்கை என்னும்பெண் (ஆகி) என நிசைக்கப்படும், மா-மகத்தான, அரும்-கிடைத்தற்கரிய, நாகமணியை-நாகரத்தினம் (போலும் சீதாபிராட்டியை) முன்பண்டு நீங்கினன்-பிரிந்தான், என்பார், மால்-உன்னதமான, நாகம்-புன்னையினது, அரும்பு-முகைகள், அலர்-கட்டவிழ்க்கும், சோலைசூழும்-தண்டலையுடுத்த, மதில்-அரங்கா-பிரகாரங்கள்பொருந்திய அரங்கமாநகருளானே, கா (அடியாக வந்து) திருவை-மால்-ஆசையுடன், கவரும்-திருடிக்கட்டபட்ட, அமுதே-அமிழ்தனையவனே, அதுவும்-அப்படி நீமயங்கியதும் ० இந்தமூடர்கள் அப்படிச்சொல்வதும் ० நின்மாயம்அன்றே-உனதுமாயையல்லவோ.()

மாயா தவர்தலை வாவரங் காவட மாமதுரை
மாயா தவரண்டர் வந்தடைந் தான்மழு வாளிபிர
மாயா தவர்செய்வர் முந்நூல்செந் நூல்கொண்ட வண்ணமொப்ப
மாயா தவாத தனைக்குடல் கோத்ததுன் வாணகமே.

இ-ள். மா-பெருமையுற்ற, யாதவர்தலைவா-அண்டர்குலத்துக்கதிபதியே, அரங்கா, மாவடமதுரைமாயா-பெரிதான வடமதுரையிற்பிறந்த ஆச்சரியகுணங்களுள்ளவனே, தவர்-இருடிகள், அண்டர்-உம்பர்(முதலியவர்) வந்து அடைந்தால் ஒருவனுக்கு அஞ்சி அடைக்கலம்புகுந்தால், மழுவாளி-அழலேந்தியும், பிரமா அயனும் (ஆகிய) அவர்-அவ்விரும்-யாதுசெய்வர் (அவனை) என்னபண்ணுவார்கள் (ஆனால்) முந்நூல் (நினதுமார்பகம்விளங்கிய முப்புரிநூல், செந்நூல்கொண்டவண்ணம்-சிவந்ததாலுடைய, நிறத்தை-சிவப்புநிறத்தை ० ஒப்ப-பொருவ மாயாத-அச்சுதமான, அழிவில்லாத ० வரத்தனை-வரங்களையுடையஇர

ணியனுடைய, குடல்-குடரை, உன்-நினது, வாள்-ஒளியிலாவிய-நகம்-உகிர்-கோத்தது (பிடுங்கி) அணிந்தது—எ-று. (௮௭)

(துன்பம்வந்தகாலத்தில் தேவரும் இருடியரும் சிவனைப்போயடுக்க அவன் தன்னாலொன்றுமாகாமல் பிரமனையடுக்க அவனும்அங்ஙனமே விஷ்ணுவைச்சரணடைந்த அப்பொழுது அவர் இவர்களுக்கு அபயஸ்தங்கொடுப்பது வழக்கம் அதற்கு இரணியன்விஷயமும் ஓர் உதாரணமாகையால் அதையெடுத்துச்சொன்னார்.)

நகமுண் டகந்தரித் தாற்கருள் மாயர்க்கு ஞாலமுந்நீர்
நகமுண் டகமகிழ்ந் தார்க்கடி யேமென்மி னற்கதிவா
நகமுண் டகம்பர னென்று தரங்கனை நாடிலய
நகமுண் டகமலர் தான்குவி யாது நுதிக்குளத்தே.

இ-ள். நகம்-உகிரால், உண்ட-கிள்ளுண்ட, கம்-சிரத்தை, தரித்தார்க்கு-ஏந்தியசிவனுக்கு, அருள்-கருணைசெய்யும், மாயர்க்கு-ஆச்சரியபூதனுக்கு, ஞாலம்-புவனங்களையும், முந்நீர் - சமுத்திரங்களையும், நகம்-பருப்பதங்களையும், உண்டு-விழுங்கி, அகம்மகிழ்ந்தார்க்கு-மனம்களித்தவர்க்கு, அடியேம்-தாசர்களாயினோம், என்மின் - என்றுசொல்லுங்கள், நற்கதி-சிரேஷ்டமுள்ளபதவியாகிய-வானகம்-திருநாடு-உண்டு-சித்திக்கும் அகம்பரனென்றுது-யான்தான்பரவானவன் [என்னாமல்-அரங்கனை நாடில்-நாடினால்-அயன்-பிரமனது, நகு-விளங்குகிற, அம்-சுந்தரமுள்ள, முண்டகமலர்-தாமரைக்கை, உம்-நடுக்குளத்தே, நுங்களது நெற்றிமத்தியிலே-குவியாது, முகுளியாது—எ-று

(முண்டகமலர்என்பது உவமைஆகுபெயர்-அது நெற்றியில்குவியாதுஎன்பது பிரமன் தன்கையைக்குவித் துங்கள்நெற்றிமையத்தில் உங்களுக்கு மறுபடியும்பிறக்க விதிவிதிக்கான் என்பதுகருத்து) (௮௮)

குளப்படி நெய்யடி சிற்கொத்த தோகொள்ளப் பற்றியதோ
குளப்படி யிற்றிங்கள் சேரரங் காகோ லமாயவன்றன
குளப்படி காட்டும் பிறைமறுப் போலொரு கோட்டிருந்து
குளப்படி யின்னகத் துட்பரல் போன்ற குவலயமே.

இ-ள். குளம்-வாவியின், படியில்-சோபானங்களால், திங்கள்சேர்-சந்திரன்போலும் (புட்கரணியையுடைய) அரங்கா - திருவரங்கமுடையாய், கோலம்ஆய அன்று-வராகஅவதாரங்கொண்டபோது, உன்-நினது, குளம்படி-நெற்றியைப்போல், காட்டும்-தோன்றும், பிறை-குழவி

த்திங்களின்-மறுப்போல் - களங்கமென்ன ஒரு (உளது) அதுவமான கோட்டு-மறுப்பில்-இருந்து, குளப்பு-குளம்புடைய, அடியின் அகத்துள்-உள்ளங்காலில்-பரல்போன்ற பருக்கைக்கல்நிகர்த்த, குவலயம்-உலகமானது (உண்டவந்நாளில்) படி - ஒருபடியளவுகொண்ட, குளம்-சர்க்கரையும், நெய்-ஆகாரமும் (கலந்த) அடிசிற்கு - பொங்கலுக்கு, ஒக்கதோ-நிகர்த்ததோ (அல்லது) கொள்ளப்பற்றியதோ - வயிறுநிறையைப் போதுமாயிற்றோ—எ-று. (௮௯)

குவலயஞ் சூழ்கடல் காயா மரகதங் கொண்டனெய்தல்
குவலயங் கண்டன்பர் நைவரென் றாற்கொற்ற வாணற்குவா
குவலைய நேமிதொட் டாயரங் காகொடும் பல்பிறப்பா
குவலையங் கற்றுனைக் காணிலென் னாங்கொல் குறிப்பவர்க்கே.

இ-ள். கொற்றம்-வென்றியுடைய-வாணற்கு, வாகு-புஜங்கள், அலைய-நெகிழ-நேமிதொட்டாய் - சக்கரப்பிரயோகஞ்செய்தனே அரங்கா, குவலயம்-நேமிவட்டத்தை, பூமியை 0 சூழ்-வளைந்திருக்கும், கடல்-நீராழி-காயா-பூவை, மரகதம்-நீலமணி, கொண்டல்-காளமேகம், நெய்தல்-ஆம்பல், குவலயம்-நீலோற்பலம், கண்டு - கண்ணுற்று, அன்பர்-நின் அடியார்கள், நைவர்என்றால் (நின்படிவத்தை அன்னவைகளைப்பூட்டலின்) சிந்தை-உருகுவாரெனில், கொடும்-கொடிய, பல்-எண்ணில்லாத, பிறப்பாகு-சென்மமாகிய, வலை-கண்ணியினின்றும், அற்று-நீங்கி, அங்கு-அந்தத்திருமாமணிமண்டபத்திலே, உனை-தேவரீரை, காணில்-தரிசித்தால், அவர்க்கு - குறிப்பு என் ஆம்கொல் - நெஞ்சு-என்ன ஆகுமோ—எ-று. (௯௰)

குறியானைச் செங்க ணெடியானை வானவர் கோனைச்சங்கக்
குறியானை வித்த திருவரங் கேசனைக் கூவிநின்று
குறியானைக் காத்தவனைப் பாடினேன் கொடிகூப்பிடினுங்
குறியானையப்பவர்போற் கொடிஎன்சொலுங் கொள்வனென்றே.

இ-ள். குறியானை-வாமனனை, செய்கண்-செந்தாமரைபோலும்-திருநயனங்களையுடைய, நெடியானை-திரிவிக்கிரமனை, வானவர்கோனை-தேவேந்திரனை, சங்கக்குறியால்-பாஞ்சசன்னியத்தின்முழக்கத்தினால், நைவித்த-வாட்டிய, திரு-அரங்கேசனை, கூவிநின்று-விளித்து, குறி சிந்திக்கும், யானை-கஜேந்திராழ்வானை, காத்தவனை-ரக்ஷித்தவனை, கொடி-

காக்கை, கூப்பிடினும்-கத்தினாலும், குறியா (அதையுமல்லல்) சகுனமென, நயப்பவர்போல்-விரும்பிக்கொள்பவர்போல, கொடியேன்சொல்லும்-தீயவனது சொற்களையும், கொள்வனென்று-அங்கீகரிப்பானென, பாடினேன்—எ-று. (௬௧)

வனத்திற சிலம்பி விடுநூலுட்பட்டு மசகமெய்த்த
வனத்திற்சிலம்பின போற்பிணிவாய்ப்பட்டென் வாய்புலம்பின்
வனத்திற்சிலம்பின் குரலன்னம் வாழு மரங்கனிப்பு
வனத்திற்சிலம்பினின்றான் கேட்குமோ வும்பர்வாழ்க்கை விட்டே.

இ-ள். மசகம்-கொசுகானது, வனத்தில்-அடவியில், சிலம்பிவிடும்-ஊர்ணநாபியிழைக்கும், நூலுட்பட்டு-நூலில்சிக்கி-மெய்த்தவனத்தில்-உடல்தவிப்பினால்-சிலம்பினபோல்-ஆரற்றினவைபோல் - பிணிவாய்ப்பட்டு-நோய்க்கண் அகப்பட்டு, என்வாய், புலம்பின்-அழுங்கினால், வனத்தில்-புனலில், சிலம்பின்-சிலம்பியின்; நூபுரத்தின் ௦ குரல்-ஒலியினையுடைய, அன்னம்-ஹம்சப்பறவைகள், வாழும் அமரும், அரங்கன்-திருவரங்கநகரான், இப்புவனத்தில்-இந்தமேதினியில், சிலம்பில்நின்றான்-திருமலையில்நிற்பவன், உம்பர்-வானவர், வாழ்க்கைவிட்டு-மங்களவாழ்க்கைவிடுத்து, கேட்குமோ-செவியுறுவனோ—எ-று. (௬௨)

விடத்தேரைமன்னும் வனப்பாழ்ங்கிணற்றுள் வெம்பாம்புபற்றும்
விடத்தேரைவாய்வண்டு தேன்வேட்டல்போல் விசித்துக்கொடுபோய்
விடத்தேரையில்வெங்கட் கூற்றையெண்ணுதெண்ணும் வேட்கையெ
ல்லாம், விடத்தேரையரங் கன்றிருத்தாளில் விழுநெஞ்சமே.

இ-ள். நெஞ்சமே-மனமே, விடத்தேரை - விடத்தேரின் தூற்றினை. மன்னும் (படர்ந்து இருக்கப்பெற்ற, வனம்-கானகத்திலுள்ள, பாழ்ங்கிணற்றுள் - பாழடைந்தகூபத்திலே, வெம்-கொடிய, பாம்பு-நாகம், பற்றும்-பிடித்திருக்கும், விடம்-நஞ்சேறிய, தேரை-பிலவங்கத்தினுடைய, வாய்வண்டு-வாயில் அகப்பட்டகுரும்பு, தேன்-மகரந்தத்தை, வேட்டல்போல்-அவாவுதலென்ன, விசித்துக்கொடுபோய்விட-இழுத்துக்கொண்டேக, தேர்-எண்ணும், அயில-வேலினையும், வெங்கண்-கொடூரமுள்ள திருக்குகளையுமுடைய, கூற்றை-அந்தகனை, எண்ணாது மதியாமல், எண்ணும்-கருதும், வேட்கையெல்லாம் - பாசங்களியாவும், விடு-நீக்கு,

அத்தேசரை-அந்தஇரதத்தை, ஊர்-கடாவும், அரங்கன், திருத்தாளில் திருவடியில், விழு-சேர்—எ-று. (௯௩)

விழுங்கூன் றசைச்சுவர் நீர்மலங் கோழைவெம் பித்தொடுக்க
விழுங்கூ னரம்புறி யென்பே ணிதோற்சட்டை. வீழ்ந்துநொந்த
விழுங்கூந் தலாரழப் பாடையிற் போய்ச்சுடும் வெய்யசெந்தீ
விழுங்கூன நோய்க்குடில் வேண்டேனரங்க விமானத்தனே.

இ-ள். விழுங்கு (நாய்நரிமுதலியவை) கவ்வும், ஊன்தசை-ஊனொடும்புலாலொடும்கூடிய, சுவர், நீர், மலம், கோழை, சிலேஷ்மம், வெம்-வெவ்விய, பித்தொடும்-பித்தத்துடன்கூடிய, கவிழும்-தலைகீழாகத்தக்க கூன், நரம்புஉறி-நாதுகளாலாயதூக்கு, என்புஏணி-அஸ்திகளாலமைத்தகடவை, தோல்சட்டை-சருமத்தாலாகிய அங்கி, வீழ்ந்து-தரையில் புரண்டு, நொந்து-மனதைநொந்து, அவிழும்கூந்தலார்-விரித்தஅளகபாரத்தையுடையவனிதையர், அழ-கதற, பாடையில், போய் (மயானஞ்) சென்றுசுடும்-தகனஞ்செய்யும், வெய்ய-சுவாலைகள்வீசும், செம்-சிவந்த நிறமுடைய, தீ-அங்கினியில், விழும்-சேரும், கூன்-கோட்டமுடைய, நோய்-பிணிகள் (குடிகொள்ளும்) குடில்-சிறிலகிரகம் (இதனை) வேண்டேன்-விரும்புகில்லேன், அரங்கவிமானத்தனே-ரங்கவிமானத்தில்கண்படுப்பவனே—எ-று. (கூன்என்பது - அடியற்ற ஓர்விதப்பாண்டத்தின்பெயர்.) (௯௪)

மானத்து வண்ட லுழலோ ரெழுத்தின் வடிவுற்றசீர்
மானத்து வண்ட வினையா ளராயினு மால்வளர்வி
மானத்து வண்டல மாமரங் கம்வழி யாவரினு
மானத்து வண்டமர் தாரண்ட ராம்பதம் வாய்க்குமங்கே.

இ-ள். மான்-உன்னதமான, கத்து-வளையானது, வண்டல்-அள்ளலிலே, உழ-தவழ, ஓரெழுத்தின்-ஒருஅட்சரத்தின், வடிவு-உற்றஉருவம் உண்டாகிய, சீர்-சிறப்பினை, மான-ஒக்க, துவண்ட-நலிந்த, வினையாளர்ஆயினும்-கர்மிகளானாலும், மால்-விஷ்ணு, வளர் - கண்வளரும்-விமானத்து (சொன்ன) விமானத்தைஉடையவன்-யாணர்பொருந்திய, தலம்ஆம்-திருப்பதியாகிய, அரங்கம் - வழியாவரினும், சிரங்கமார்க்கமாய் வந்தபோதிலும், மானத்து - பெருமைபொருந்திய, வண்டுஅமர்-அளிகள்பொருந்திய, தார்அண்டர் தொங்கல் (புனைந்திருக்கும்) நித்தியசூரிகள், ஆம்-ஆகும், பதம்-கதி, வாய்க்கும்-சித்திக்கும், அங்கு - அசை —எ-று. (௯௫)

அங்காக் கைத்தேமங்கைக் கீந்தா னரங்க னவனிக்குவாய்
அங்காக் கைக்கேபசித் தகனி கவேமுத்தி யாக்கித்துயர்
அங்காக் கைக்கேலிலர் வேறேதொழுவ ரருந்திரவிய
அங்காக் கைக்கேதனத் தாட்ரு மோதிரு வன்றியிலே.

இ-ள் அம்-அழகிய, கா-கற்பகத்தருவை; மங்கைக்கு-சத்தியபாமைக்கு, கைக்கு ஈந்தான்-கரத்தில் அளித்தவன், அரங்கன், அவனிக்கு-உலகுக்கு, வாய்-திருவதாரத்தை, அங்காக்கைக்கு - அண்ணாக்குமவ்வளவு, பசித்தான்-பசித்தவன், கிறக-அவனன்றியில், சிலர் அனேகர், முத்தியாக்கி-கற்கதி அளித்து, துயராக்காக்கைக்குவிபத்துகள் (வாராது) அளிக்க, வேறேதொழுவர்-புறத்தொழுவார், சில்லரைதெய்வங்களைப் பணிவார் ; அருந்திரவியம்-கிடைத்தற்கரிய ஆக்கத்தை, திருஅன்றியில்-இலக்ஷ்மி அல்லாமல், காக்கைக்கேதனத்தாள்- வாயசக்கொடியையுடைய மூதேவி, தருமோ-கொடுப்பாளோ—எ-று. (௯௬

அன்றே யடைய வுனக்கேயடிமையென் றுய்ந்துணர்ந்தார்
அன்றே யடையப் படுவா ருனையரங் காவனத்தில்
அன்றே யடைய யயில்வோ ருமீதறி யாரறிஞர்
அன்றே யடையைம் புலனு லுநன்றில்லை யாங்கவர்க்கே.

இ-ள். அரங்கா-அன்றே (உலகில்ஜன்மித்த) போதே, அடைய-அடங்கலும், தாமும்-தமதுடைமையும் ; உனக்கே, அடிமையென்று-தாசத்துவம்பூண்டிருத்தலாய், ஆய்ந்து - ஆராய்ந்து, உணர்ந்தார் அன்றே. அறிந்தவர் அல்லவா, உனை, அடையப்படுவார்-சேருமவர், வனத்து-கானில், இயன்று-உறைந்து, எய் (மாத்தில்) பொருந்திய, அடை-இலை (முதலியவற்றை) அயில்வோரும்-புசிப்பவரும், ஈதறியார்-இதனை உணரகில்லாரெனில், அறிஞர் அன்று-ஞானியர் அல்ல, அடை-காவலிலேடப்பட்ட, ஐம்புலனுலும்-பஞ்சேந்திரியங்களாலும், அவர்க்கு, நன்கு-பயன் ; இல்லை-ஆங்கு-அசை—எ-று. (௯௭)

ஆங்காரமாமின்னைத் தோய்மார் பரங்க னளியினையுண்டு ;
ஆங்காரமானில முண்டாற்குத்தொண்டனிவ் வண்டத்தப்பால்
ஆங்காரமான்பகு திப்புறம்போயமு தாற்றிற்படிந்து ;
ஆங்காரமானடி காண்பேனவன்ற னருள்சிந்தித்தே.

இ-ள். ஆம்-நீர் (உண்ட) கார்-கொண்டலினது, அம்ஆ-அழகுதுகசுந்தரம்போல ; மின்னை பிராட்டியாரை, தோய் பழித்திருக்கப்பெற்ற,

மார்பு-வட்சஸ்தலமுடைய, அரங்கன்-அவனை, ததியை-உண்டான்கு-புசித்ததுபோல, ஆர (குறைபட்டவயிறு) நிரம்ப, மாவலிபரிய,நிலம்-புவனத்தையும், உண்டார்க்கு-அமுதுசெய்தவர்க்கு தொண்டன்-அடியன் ஆயினேன் (ஆகையால்) இவ் அண்டத்தப்பால்-இந்தஅண்டகோளகைக்கப்புறத்தில், ஆங்காரமான் (யான் எனதென்னும்) ஆங்காரமமகாரங்களையுடைய, பகுதிப்புறம்போய்-பிரகிருதியைவிட்டுநீங்கி, அமுது ஆற்றில்படிந்து-விரசாநதியில்தோய்ந்து, ஆந்து-அவ்விடத்தில், ஆர் எழுந்தருளிய, அம்மான்-சுவாமியினது, அடி-திருவடிகளை, அவன்தன் அருள்-அவனுடையகருணையை, சிந்தித்து-தியானஞ்செய்து, காணுவேன்-தரிசிப்பேன்—எ-று. (௬௫)

சிந்தா குலமுய்யக் குன்றெடுத் தாய்தென் னரங்கசுற்றுஞ்
சிந்தா குலகம் படைத்தளித் தாய்நிலஞ் சென்றிரந்த
சிந்தா குலவுசெல் வந்தந்தை தாய்குரு தெய்வமுநீ
சிந்தா குலமடைந் தேனடி யேன்சென்மந் தீர்த்தருளே.

இ-ள். சிந்து-பரவிய, ஆகுலம்-ஆனநிரை, உய்ய-உயிர்உற்றிருக்க, குன்றுஎடுத்தாய்-வெற்பெடுத்தவனே, தென் அரங்க-திருவரங்கமுடையாய்-சுற்றும், சிந்து ஆகு-அம்பரம்ஆகிய, உலகம்-மேதினியை,படைத்து-சிருஷ்டித்து, அளித்தாய்-ரட்சித்தவனேசென்று (மாவலிபால்) எய்தி, நிலம் (மூன்றடி) மண்ணை, இரந்த-ஏற்ற, சிந்தா-மணிக்குறளனே, குலவு-பாராட்டத்தக்க, செல்வம்-சம்பத்தும், தந்தை-பிதாவும் தாய்-மாதாவும், குரு-ஆசாரியரும், தெய்வமும்-குலதேவதையும், நீ-நீயே, சிந்தாகுலம் அடைந்தேன்-மனவியாகுலம்உற்றனன் (ஆகையினால்) அடியேன்-தாசபூதனுகியஎனது, சென்மம்-பிறப்பை, தீர்த்து-ஒழித்து; அருள் (இனிவாராமல்) கிருபைசெய்—எ-று. (௬௬)

தீரத் தரங்கப் பவநோய் துடைத்தென்னைத் தேவரொடுந்
தீரத் தரங்கப் பணிகாப் பவைத்த செயலென்பதோர்
தீரத் தரங்க வபயமமன் னார்க்குந் திரைப்பொன்னிசூழ்
தீரத் தரங்கன் சிலம்பார்ந்த செய்ய திருவடியே.

இ-ள். அத்தர்அங்க-பிரமருத்திராதியர் (வாழும்) மேனியாய், அபயம்-அடைக்கலம், என்று-என்பதுபோல, ஆர்க்கும்-ஆரவாரிக்கும், திரை-அலைகளையுடைய, பொன்னி-தென்திருக்காவேரியாறு, சூழ்-சூழ்ந்த, தீரத்து-வரம்பினையுடைய, அரங்கன்-சிலம்பு ஆர்ந்த-நூபுரம்அ

ணிக்க, செய்ய-செந்தாமரைபோலும், திருவடி - சிறப்புற்றபாதங்கள், தராங்கம்-சாகரம்போலும், பவநோய் - ஜென்மப்பிணியை, தீர-ஒழிய, துடைத்து-அரித்து, என்னை-அடியேனை, தேவரொடும் - நித்யஸூரிகளுடன்கூடி, திரத்து-தைரியத்துடன், அரங்கப்பணி (மோட்ச) வீட்டின்வேலைகளை காப்பவைத்த-பண்ணுவித்த, செயலென்பது-செய்கையினை, ஓர்தீர்-அறியுங்கள்—எ-று. (௱)

பணவா ளரவி னரங்கே சர்தாளிற் பருதிவளை
நிணவா ளஞ்சார்ங்கங் கதைதோளிற்சாத்தின னீணிலமேற்
குணவா ளராம்பட்டர்க் கேழேழ்பிறப்புங் குடியடியான்
மணவாள தாசன் யமகவந் தாதி வணைந்தன னே.

இ-ள். பருதி-நேமி, வளை-பாஞ்சசன்னியம், நிணம் (மாற்றலரின்) நெய்தோய்ந்த, வாள்-நாந்தகம், அம்-சுந்தரமான, சார்ங்கம்-கதை-தண்டம், தோளில்சாத்தினன் (ஆகியபஞ்ச) சமுஸ்காரங்களையும்பெற்றவரும், நீள்நிலம்மேல்-நெடும்புவியில், குணவாளர் ஆம்-நற்குணம்படைத்தவர் ஆகிய, பட்டர்க்கு, எழ்எழ் பிறப்புங்குடி-அடியான் - பதினான்குதலைமுறைகளும் தொண்டுபட்டவரும் ஆகிய, மணவாளதாசன் - திவ்யகவிப்பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்என்பவர், பணம் - ஆயிரம்சிரங்களையுடைய, வாள்-ஒள்ளிய, அரவின் - திருவனந்தாழ்வானில் (கண்படுக்கும்) அரங்கேசர்-திருவரங்கநாயகருடைய, தாளில்-திருவடியில், யமகஅந்தாதி, வணைந்தனன்-சூடினான்—எ-று. (ரக

திருவரங்கத்தந்தாதிப்பிரதிபதம்

முற்றிற்று.

அழகியமணவாளதாசர் திருவடிகளேசரணம்.